
கொலம்பியா வெளியீடு
ஸ்ரீ வள்ளி டிராமா ஸெட்
6 ரிகார்டுகள் G.E. 6281 TO 6286
ஸ்ரீ வள்ளி படத்திலுள்ள
ஒரிஜினல் பாட்டுகள்
வசனங்களுடன்
இப்படத்தில் உங்கள் அபிமானத்துக்குகந்த நட்சத்திரங்கள்
T.R. மஹாலிங்கம், P.A. பெரியநாயகி,
T.R. ராமச்சந்திரன் முதலியவர்களைக்கொண்டு தயாரித்தது!
ரஸ்வதி ஸ்டோர்ஸ், மவுண்ட்ரோடு, மதராஸ்


களங்கமற்ற
மேனிக்கு
KANTI
காந்தி
சோப்
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ்
லிமிடெட், பம்பாய் 15


கல்கி
பொருளடக்கம்

மலர் 5 }
இதழ் 26 }

1946 பிப்ரவரி 3

{ பார்த்திப
{ தைமீ 21உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.


சர்க்கார்-லீக் கட்சியின் சார்பாக இந்திய
சட்டசபைக்கு நின்ற ஸர் கவாஸ்ஜீ ஜீஹாங்கீரைக்
காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ மஸானியவர்கள்
படுதோல்வி அடையச் செய்தார்.
ஸர் கவாஸ்ஜீ ஜீஹாங்கீர்.
அமெரிக்க விஞ்ஞானிகள் பூலோகத்திலிருந்து
சந்திர மண்டலத்துக்குத் தொடர்பு ஏற்படுத்தி
விட்டதாகச் சொல்லுகிறார்கள்.
ஆனால் இந்தியர்களை ஏணி வைத்து
மண்டலத்தை எட்டிப் பார்க்கவும்
விடேன் என்கிறார்.

கல்கி

மலர் 5 } தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடிப் பாப்பா —பாரதியார் } இதழ் 26

என்ன சேதி?

வெளிப்பட்டார்!

சமீபகாலத்திலே, அதாவது சென்ற மூன்று நான்கு வருஷங்களில் தேசத்துக்காகப் பல துணிகரமான காரியங்கள் செய்து இந்திய மக்களின் அன்புக்கும் நன்மதிப்புக்கும் பாத்திரமானவர்கள் இருவர். அவர்களிலே ஒருவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ். ஸ்ரீ போஸ் வெளிநாட்டிலிருந்து கொண்டே போட்டி சர்க்காரையும் ராணுவத்தையும் அமைத்து, கீழ்த்திசையில் பிரிட்டன் கைவிட்டோடி வந்த நம் நாட்டு மக்களைப் பாதுகாத்தது மல்லாமல் எல்லா விதமான தியாகங்களுக்கும் இன்னல்களுக்கும் உள்ளாகி இந்தியாவை விடுதலை செய்ய முயன்றார். அவருடைய வீர வாழ்க்கை இந்திய சரித்திரத்திலே என்றும் அழியாப் புகழ் பெற்று விளங்கும்.

ஏறக்குறைய அத்தகைய புகழுக்கும் நன்மதிப்புக்கும் உரியவரான மற்றொருவர் நமது இந்திய நாட்டில் இருந்து கொண்டிருக்கிறார். அவர் ஒரு பெண்மணி என்பதை நினைக்கும் போது நமக்கு எவ்வளவோ ஆனந்தமும் பெருமிதமும் உண்டாகின்றன. ஸ்ரீமதி அருணா ஆஸப் அலி என்ற அந்த வீரப் பெண்மணி, சில நாளைக்கு முன்பு சென்னைக்கு விஜயம் செய்து திரும்பிய காரியக் கமிட்டி அங்கத்தினர் ஜனாப் ஆஸப் அலியின் அருமை மனைவியாவர். சென்ற 1942-ம் வருஷத்து ஆகஸ்ட் போராட்டத்தில் அவர் தீவிரமாக ஈடுபட்டு அந்த இயக்கத்துக்குப் பெரும் உத்வேக சக்தியாக விளங்கினார். திரைமறைவில் இருந்து கொண்டே அந்தப் போராட்டத்தை வெகு காலம் நடத்தி வந்தார். அதன் காரணமாக பிரிட்டிஷ் சர்க்காரின் கடுங்கோபத்துக்கு உள்ளானார் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அவரைப் பிடிப்பதற்காகச் சர்வ வல்லமையுள்ள பிரிட்டிஷ் சர்க்காரின் வாரண்டு பிறந்தது. பெயர் பெற்ற ஸி. ஐ. டி. இலாகாவின் புகழ்பெற்ற நிபுணர்கள் இந்தியா முழுவதிலும் அவரைப் பிடிப்பதற்காகத் தேடித் திரிந்தார்கள். ஆயினும் அவர்களுடைய முயற்சியெல்லாம் வீணாயிற்று. அருணா ஆஸப் அலி அகப்படவே இல்லை. கடைசியாக தேசத்தின் அரசியல் நிலைமை மாறியிருப்பதன் விளைவாக, சென்ற வெள்ளிக்கிழமை யன்று அவர் மீதிருந்த கைது வாரண்டுகளை டில்லி பிரதம கமிஷனர் ரத்து செய்து விட்டார். அதன் மேல் ஸ்ரீமதி அருணா தமது அக்ஞாத வாசத்திலிருந்து தாமாகவே வெளிப்பட்டு வந்தார். சென்ற 30உ மாலை கல்கத்தாவில் நடந்த பொதுக் கூட்டத்தில் வீரப் பிரசங்கம் செய்தார்.

பழைய பாரத நாட்டின் இராஜபுத்திர வீராங்கனைகளின் வரிசையில் சேர்க்கப்பட வேண்டிய ஸ்ரீமதி அருணா ஆஸப் அலியை நாற்பது கோடி பாரத மக்களோடு சேர்ந்து நாமும் மனப்பூர்வமான மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். அதோடுகூட, அவரைப் பிடிப்பதற்காகத் தாங்களும் தலைமறைவாகி அவர் இல்லாத இடங்களிலெல்லாம் தேடி அலைந்து பற்பல இன்னல்களுக்கும் உள்ளான ஸி. ஐ. டி. நிபுணர்களுக்கும் அவர்களுடைய கஷ்டங்கள் முடிவுற்றது குறித்து நமது மனமார்ந்த வாழ்த்துக்களைக் கூறுகிறோம்.

வந்து சேர்ந்தார்!

அக்ஞாத வாசத்திலிருந்து ஸ்ரீமதி அருணா வெளி வந்ததிலே நம்முடைய எல்லா ஆனந்தத்தையும் குதூகலத்தையும் ஒரேயடியாகச் செலவழித்துவிடக் கூடாதென்றும், அதில் ஒரு பகுதியைத் தமக்கும் செலவிட வேண்டுமென்றும் மற்றொரு இந்திய வீரப் பெண்மணி கோருகிறார். இந்தக் கோரிக்கையுடன் அவர் அமெரிக்காவிலிருந்து ஆகாச விமானத்தில் பறந்து வந்திருக்கிறார். ஸ்ரீமதி அருணாவுடன் போட்டியிடும் அந்தச் சகோதரி ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் தான் என்று சொல்ல வேண்டியதில்லை.



ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்

சென்ற 1945-ம் வருஷத்தில் இந்தியாவுக்கு மகத்தான தொண்டு புரிந்த ஒரு தனி நபர் யார் என்று யோசித்தோமானால் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்டைத் தவிர வேறு யாரையும் சொல்வதற்கில்லையென்று முன்னம் ஒரு முறை நாம் எழுதியிருக்கிறோம். ஸ்ரீமதி பண்டிட் ஸான் பிரான்ஸிஸ்கோ மகாநாட்டின் போதும் அதற்குப் பிறகும் அமெரிக்காவில் இந்தியாவின் சார்பாகச் செய்து வந்த பிரசாரத் தொண்டு ஒப்பற்றதாகும்.

அன்னிய நாட்டில் ஒன்றரை வருஷ காலமாகச் சலியாமல் உழைத்த பிறகு, ஸ்ரீமதி பண்டிட் சென்ற திங்கட்கிழமையன்று இந்தியாவுக்குத் திரும்பி வந்திருக்கிறார். அவரை நாம் உள்ளம் நிறைந்த மகிழ்ச்சியுடன் வரவேற்பதுடன், அவர் அடுத்த முறை அமெரிக்காவுக்குப் போகும்போது இந்திய சுயராஜ்ய சர்க்காரின் அதிகாரம் பெற்ற ஸ்தானாதிபதியாகச் செல்வாரென்று எதிர்பார்க்கிறோம்.

எந்த இடம்?

லார்ட் வேவல் புதிய மத்திய சட்டசபைக்கு வந்திருந்த சில அங்கத்தினர்களையும் ஏராளமான காலி நாற்காலிகளையும் பார்த்துச் செய்த ஏழு நிமிஷப் பிரசங்கத்திலே, அதிகமான விசேஷம் எதுவும் இல்லாவிட்டாலும் ஒரே ஒரு விசேஷம் மாத்திரம் இருக்கிறது. அவர் கொஞ்சமாகப் பிரசங்கம் செய்ததனால் கொஞ்சமாகவே குழப்பமும் சந்தேகமும் விளைவித்து, அந்தப் பிரசங்கத்தைப் பற்றித் தேசத் தலைவர்களும் பத்திரிகைகளும் கொஞ்சமாகவே கண்டனம் செய்யும்படி பண்ணியிருக்கிறார்.

"க்யூ" வரிசையிலே வெகு காலமாகக் கால் கடுக்க நின்றுகொண்டிருக்கும் இந்தியாவுக்கு வைஸ்ராய் வேவல் தமது பிரசங்கத்தில் ஓர் ஆறுதல் வார்த்தை சொல்லுகிறார். இந்திய சுதந்திரத்துக்காக எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளுக்குத் தேதிகளை நிர்ணயிப்பது விவேகமல்லவென்றார், ஆனால் இந்திய சுதந்திரப் பிரச்னை லண்டனிலும் டில்லியிலும் பிரதான வரிசையில் வைத்துக் கவனிக்கப்படுவதாகவும் சொல்லியிருக்கிறார். இவ்வளவு நாளைக்குப் பின்னால் இந்தியப் பிரச்னை பிரதான வரிசைக்கு வந்திருப்பதில் எல்லோருக்கும் சந்தோஷந்தான். ஆனால், அந்தப் பிரதான வரிசையிலே எந்த இடம் என்பதையும், எப்போது பிரச்னை பைசல் ஆகும் என்பதையும் அறிய ஆவலாயிருக்கிறோம்.

மூன்றாவது யுத்தம்!

மூன்றாவது உலக மகா யுத்தம் எந்த நிமிஷத்திலும் ஆரம்பமாகலாம் என்பதற்கு இப்போதிருந்தே அறிகுறிகள் தென்படுகின்றன. இந்த மூன்றாவது உலக மகா யுத்தத்தை ஜப்பானோ ஜெர்மனியோ ஆரம்பிக்கப் போவதில்லை; இந்தியாவிலேயே அது ஆரம்பமாகப் போகிறது. அதிலும் ஒரு இந்திய சமஸ்தானமே மேற்படி மூன்றாவது உலக மகா யுத்தத்தை ஆரம்பிக்கப் போகிறது என்றால் அது எல்லோருக்கும் அதிசயம் உண்டாக்காமலிருக்குமா?

ஹைதராபாத் நைஜாம் தன்னுடைய சமஸ்தானத்துக்கு ஒரு கடல் மார்க்கம் வேண்டுமென்று கோருகிறார். அதாவது நைஜாம் ராஜ்யத்திலிருந்து வங்காளக் குடாக்கடலுக்குப் போக்குவரத்து வைத்துக்கொள்ள நூறு மைல் நீளமுள்ள கடல் மார்க்கம் ஆந்திர ஜில்லாக்களின் வழியாக வேண்டுமென்று பிரிட்டிஷ் சர்க்காரைக் கேட்டிருக்கிறார். ஹிட்லர் கிழக்குப் பிரஷ்யாவுக்குக் கடல் மார்க்கம் கேட்டார் என்பதும், டான்ஸிக் துறைமுகத்தை அவருக்குக் கொடுக்காததாலேயே இரண்டாவது உலக மகா யுத்தம் உண்டாயிற்று என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இப்போது நைஜாமும் அம்மாதிரி கடல் மார்க்கம் வேண்டுமென்று கேட்கிறாரென்றால், அதைப் பார்த்து நாம் கலங்காமலிருக்க முடியுமா?

பிரிட்டிஷ் சர்க்கார் ஏதாவது ஒரு துறைமுகத்தைக் கொடுத்து நைஜாமுடன் சிநேகமாகப் போகுமா, அல்லது மறுபடியும் ஒரு யுத்தத்தை இழுத்து வைத்துக்கொள்ளுமா என்று தெரியவில்லை. இதற்கிடையில் நமது ஆந்திர மாகாணத்துச் சகோதரர்கள் யுத்த முஸ்தீப்புகளை வீராவேசமாகச் செய்து வருகிறார்கள். எனவே, ஹைதராபாத் சர்க்கார் தங்களுடைய இறுதி எச்சரிக்கையை எப்போது அனுப்பப் போகிறார்களோ என்று நமக்குப் பெரிதும் கவலையாயிருக்கிறது. மனித குலத்தின் நன்மையைக் கருதியாவது நைஜாம் தம்முடைய யுத்தத்தை ஒத்தி வைப்பாரென்று எதிர்பார்க்கிறோம்.

சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: சந்துரு, 40, பழைய முன்சீப் கோர்ட்டுத்தெரு, வேலூர்.

ரொம்ப ரொம்ப... அச்சா ஹை!

ஹிந்துஸ்தானி ஹமாரா ராஷ்டிர பாஷா ஹை; மகாத்மா காந்திஜினே ஹிந்துஸ்தானி பிரசார் கே லியே மதராஸ்கோ ஆகயே ஹை(ம்). இனிமேயே, நாம் ஹிந்துஸ்தானி கற்றுக் கொள்வது மிகவும் அவசிய ஹை! காந்தி மகான் 'கொஞ்சம் கொஞ்சம்' தமிழ் கற்றுக் கொண்டிருப்பது போல் நாமும் 'தோடா தோடா' ஹிந்துஸ்தானி கற்றுக்கொண்டிருப்பது அச்சா ஹை! பஹுத் அச்சா ஹை! ரொம்ப ரொம்ப அச்சா ஹை!!

என்னதான் ராஷ்டிர பாஷையில் சொன்னாலும், நம்முடைய சொந்தத் தாய் மொழியிலே 'ரொம்ப ரொம்ப' என்று போட்டால்தான் மனஸுக்குத் திருப்தி ஏற்படுகிறது அல்லவா?

* * *

சென்னை வாசிகள் ரொம்ப ரொம்ப அதிர்ஷ்டசாலிகள் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. இந்தத் தடவை காந்தி மகாத்மாவின் சென்னை விஜயம் அவ்வளவு ரொம்ப ரொம்ப அச்சாவாக அமைந்து விட்டது. முன்னேயும் சில தடவை மகாத்மா சென்னைக்கு வந்திருக்கிறார். அப்போதெல்லாம் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் ஒரே ஒரு பெரிய பொதுக் கூட்டம் நடைபெறும். கணக்கில்லாத ஜனங்கள் மகாத்மாவைப் பார்ப்பதற்காகக் கூடுவார்கள். பெரும்பாலோர் எங்கேயோ வெகு தூரத்தில் நிழல் படத்தைப் போல் தோன்றும் காந்திஜியின் உருவத்தைப் பார்ப்பார்கள். ஏற்கனவே படங்களிலே பார்த்திருப்பதை நினைத்துக் கொண்டு 'அவர்தான் காந்தி மகானாயிருக்க வேண்டும்' என்று ஒருவாறு முடிவு கட்டிக் கொள்வார்கள். காந்தி மகான் பேசுவதாகத் தோன்றும். பிரம்மாண்டமான கூட்டத்தின் இரைச்சலில் அது தெளிவாய்க் காதில் விழாது. காதில் விழுந்தாலும் இன்ன விஷயம் என்று தெரியாது. இதற்குள்ளாகக் கூட்டம் முடிந்து விடும். "ஏதோ காந்தி மகானைத் தரிசித்தோம்" என்ற திருப்தியுடன் சிலரும், "காந்தி மகானைத் தரிசித்தவர்களைத் தரிசித்தோம்" என்ற திருப்தியுடன் பாக்கிப் பேரும் வீடு திரும்புவார்கள்.

கடைசியாக ஒன்பது வருஷத்துக்கு முன்பு மகாத்மா சென்னைக்கு வந்திருந்த போது அவ்வளவு அதிர்ஷ்டம் கூடச் சென்னை வாசிகளுக்குக் கிட்டவில்லை.

காந்தி மகான் பொதுக் கூட்டத்தின் மேடைக்கு வந்தவுடனே, கூட்டத்தில் ஒரு பகுதியினர் மேடைக்கு அருகில் காலியாயிருந்த ஒரு சிறு இடத்தை நோக்கி முன்வரத் தொடங்கினார்கள். அவ்வளவுதான்! கூட்டம் முழுவதும் ஒரேயடியாகத் திரண்டு, மேடையை நோக்கி முன்னேறி வரத் தொடங்கியது. அதன் பயனாக ஐந்தே நிமிஷத்தில் கூட்டம் முடிவுற்றது. கூட்டத்துக்கு எவ்வளவோ ஆவலுடன் வந்திருந்த லட்சக் கணக்கான ஜனங்கள் காந்திஜியைச் சரியாகத் தரிசிக்கக்கூட முடியாமல் போய்விட்டது.

மேற்சொன்ன பழைய அநுபவங்களுக்கெல்லாம் மாறாக, இந்தத் தடவை காந்தி மகாத்மா பத்து நாளைக்கு மேல் சென்னை நகரில் தங்கியிருந்தார். சென்னை நகர் வாசிகளும் வெளியூர்களிலிருந்து வந்தவர்களும் ஆயிரம், பதினாயிரம், லட்சம் என்ற கணக்கில் திரள் திரளாகத் திரண்டு வந்து மகாத்மாவைத் தரிசித்தார்கள்.

ஒவ்வொரு நாளும் காந்தி மகாத்மாவை ஜனங்கள் கண்குளிர மனங்குளிரக் கண்டு ஆனந்திப்பதற்கு வெவ்வேறு சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருந்தன. அந்தந்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டு பலர் வந்து காந்திஜியைக் கண்டு களித்தார்கள். பகல் வேளையில் 'பாஸ்' வாங்கிக் கொண்டு ஹிந்துஸ்தானி நகருக்கு வந்து மகாத்மாவைத் தரிசித்தார்கள். சாயங்கால நேரத்தில் சுதந்திரமாக வந்து பிரார்த்தனையின் போது அவரைப் பார்த்து மகிழ்ந்தார்கள்.

* * *

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே" என்னும் தமிழ் முதுமொழியை லட்சக் கணக்கானவர்கள்

கடைப் பிடித்து, உலகத்திற்குள்ளே உத்தம புருஷராக விளங்கும் பெருமானைக் காண்பதால் அடையும் நன்மையை அடைந்தார்கள்.

அடுத்தபடியாக, ''நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே!'' என்ற முதுமொழி தொடர்ந்து வருகிறதல்லவா? இந்த முதுரையின்படி காந்தி மகாத்மாவின் பொன் மொழிகளைக் கேட்பதால் அடையக் கூடிய நன்மையையும் அநேகர் அடைந்தார்கள். நேர்முகமாக அவர் சொல்வதைக் கேட்டு, அறிந்து கொள்ள முடியாதவர்கள் மறு நாள் தினசரிப் பத்திரிகைகளிலே படித்து அறிந்தார்கள். அல்லது பிறரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

எனினும், அந்த உலகம் போற்றும் அவதார மூர்த்தியின் உபதேசங்களை நேரிலே கேட்டு உணர்ந்து பயன் அடையும் பாக்கியத்தைச் சென்னை மக்கள் பூரணமாக அடையவில்லையென்றே சொல்ல வேண்டும்.

இதற்குக் காரணமாயிருந்தவர் ஒரே ஒரு தனிப்பட்ட மனுஷர் என்பது வியப்பளிக்கும் விஷயந்தான். ஆனாலும் அது உண்மை. மகாத்மா விஜயத்தின் மூன்றாவது நாள் மாலைப் பிரார்த்தனைக் கூட்டத்தில் ஒரு ஆந்திர சகோதரர் குறுக்கிட்டு எழுந்து நின்று, ''மகாத்மா ஹிந்துஸ்தானியில் பேசுவதைத் தமிழிலே மொழி பெயர்த்துச் சொல்வது போல் தெலுங்கிலும் மொழி பெயர்த்துச் சொல்ல வேண்டும்'' என்று கேட்டார். மகாத்மாவே அவரை உட்காரும்படி சொல்லியும் அந்த மகானுபாவர் உட்காரவில்லை. திருப்பித் திருப்பி, ''சென்னை இரண்டு பாஷைகளுக்குரிய நகரம்; ஆகையால் தெலுங்கிலும் மொழி பெயர்த்தே ஆகவேண்டும்'' என்று சொல்லிக் கொண்டிருந்தார். இந்தக் கோரிக்கையை அவர் மகாத்மாவுக்கு எழுதி அனுப்பியிருக்கலாம். அல்லது தனிப்பட வந்து சொல்லியிருக்கலாம். லட்சம் பேர் உள்ள கூட்டத்தில் நடுவில் எழுந்து நின்று எவ்வளவு சொல்லியும் கேட்காமல் தொல்லை கொடுத்ததால் மகாத்மாவின் மனம் பெரும் வேதனைக்குள்ளாயிற்று. ''இனிமேல் மொழி பெயர்ப்பே வேண்டியதில்லை. ஹிந்துஸ்தானியில் நான் பேசுவதைத் தெரிந்து கொள்பவர்கள் தெரிந்து கொள்ளட்டும். மற்றவர்கள் பத்திரிகையில் பார்த்துக் கொள்ளட்டும்'' என்று சொல்லி விட்டார்.

மேற்படி ஆந்திர சகோதரர் ''எனக்கு இரண்டு கண்ணும் போனாலும் போகட்டும்; அடுத்த வீட்டுக்காரனுக்கு ஒரு கண் போனால் சரி'' என்ற தோரணையில் நடந்து கொண்டார். மகாத்மா

வின் உள்ளம் புண்படுவதைக் கூட
அவர் பொருட் படுத்தவில்லை. எப்ப
யாவது சென்னை நகரில் ஆந்திரர்களின்
பாத்தியதையை நிலை நாட்டிவிட
வேண்டுமென்று அவர் பிடிவாதம்
கொண்டிருந்ததாகக் காணப்பட்டது
இப்படிப்பட்ட காரியத்தை ஆந்திர
தலைவர்கள் யாரும் கண்டித்து ஒ
வார்த்தையும் சொல்லவில்லையென்
பதையும் கவனிக்க வேண்டும்.

மேற்படி சம்பவத்தினால் மாலை
பிரார்த்தனைக்குக் கூடிய லட்சக் கண
கான ஜனங்கள் மகாத்மாவின் அமு
மொழிகளை உடனுக்குடனே தெரிந்
பயன் பெற முடியாமற் போயிற்
என்றாலும், ''எல்லாம் ஒரு நல்
மைக்கே!'' என்பதற் கிணங்க, அந்
ஆந்திர மகானுபாவரின் காரிய
தினாலும் ஒரு நன்மை ஏற்பட்டது
அதாவது, மகாத்மா இந்தத் தடவை
சென்னைக்கு எந்த முக்கியமான காரிய
துக்காக விஜயம் செய்தாரோ, அதை
எல்லாருடைய மனதிலும் நன்றாக
பதியும்படி செய்வது சாத்தியமாயிற்று

இந்தத் தடவை மகாத்மா காந்
யின் சென்னை விஜயம் முக்கியமா
தேசிய பாஷையாகிய ஹிந்துஸ்தான
பிரசார சம்பந்தமாக ஏற்பட்டதாகும்.

இந்திய தேசம் முழுவதற்கு
பொதுவாக ஒரு தேசிய பாஷை அவ
யம் என்பதும், அப்படி தேசியப் பொது
பாஷையாகக் கூடியது ஹிந்துஸ்தான
யைத் தவிர வேறில்லையென்பது
புதிய விஷயங்கள் அல்ல. பல தடவை
பலரும் கூறி எல்லாரும் ஒப்புக்கொண்
உண்மைகள். அகில இந்திய ஒற்
மையை முன்னிட்டு ஹிந்துஸ்தானி
பிரசாரத்தில் மகாத்மாவுக்குள்ள சிர
தையும் நாம் அனைவரும் அறிந்தே
அவருடைய விருப்பத்தினாலேதா
சென்னையில் ஹிந்தி பிரசார இயக்க
ஆரம்பமாயிற்று. அவருடைய இடை
விடாத சிரத்தையினாலும் ஆசியினால
தான் தென்னாட்டில் ஹிந்துஸ்தான
இவ்வளவு தூரம் பரவியிருக்கிறது.

இருபத்தைந்து வருஷத்துக்கு மு
னால் தமிழ் நாட்டில் ஹிந்துஸ்தா
தெரிந்த தமிழர்களை விரல் விட்
எண்ணிவிடலாம். இப்போது ஹி
துஸ்தானி தெரிந்த தமிழர்கள் ஆயிர
கணக்கிலும், பதினாயிரக் கணக்கிலு
இருக்கிறார்கள். பலர் பரீட்சையி
தேறிப் பட்டமும் பெற்றிருக்கிறார்கள்

ஆனால் இந்த அபிவிருத்தி போதும
இதனால் மகாத்மா காந்தி திருப்
அடைந்து விட்டாரா?

தென்னாட்டினர் போதிய அள
ஹிந்துஸ்தானி கற்றுக் கொள்ள வில்

என்பது பற்றி மகாத்மா பலமுறை தமது மனக் குறையைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

முதன் முதலில் யாருடைய கிரஹத்தில் சத்தியாக்கிரஹ இயக்கம் ஆரம்பமாயிற்றோ, அப்பேர்ப்பட்ட ராஜாஜியே இன்னும் ஹிந்துஸ்தானி பாஷையில் பிரசங்கம் செய்யக் கற்றுக் கொள்ளவில்லையே என்று மகாத்மா குறைப்பட்டார்.

காங்கிரஸ் பிரமுகர்களும் ஊழியர்களும் சுமார் 500 பேர் கூடியிருந்த கூட்டத்தில் "ஹிந்துஸ்தானி தெரிந்தவர் எத்தனை பேர்?" என்று கேட்டபோது 15 பேர்தான் கை தூக்கினார்கள்! இது மகாத்மா காந்தியைத் தூக்கிவாரிப் போட்டிருக்க வேண்டும்.

ஆனால் சென்னை நகர்வாசிகளும் சரி, சென்னைக் காங்கிரஸ் வாதிகளும் சரி, ஹிந்துஸ்தானி விஷயத்திலாவது மகாத்மாவின் மனமார்ந்த விருப்பத்தை நிறைவேற்றுவதிலாவது அசிரத்தை கொண்டவர்கள் என்று சொல்ல முடியாது. பின்னர், தேசிய பாஷை அபிவிருத்தி தென்னாட்டில் இவ்வளவு நிதானமான வேகத்தில் நடந்து வருவதின் காரணம் என்ன?

மனுஷர்கள் ஒரு பிராயத்தைக் கடந்து விட்டால் புதிய பாஷை ஒன்றைக் கற்றுக் கொள்வது அவ்வளவு எளிய காரியமல்ல வென்பதுதான் காரணம். எவ்வளவுதான் விருப்பமிருந்தாலும் சிரத்தை யிருந்தாலும் இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் புதிய பாஷை பயிலுதல் சாதாரணமாகக் கூடிய சாத்தியமாயிருப்பதில்லை; கஷ்ட சாத்தியமாகக்கூட இருப்பதில்லை.

வடநாட்டார் எத்தனை பேர் தமிழ் பாஷை கற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தோமானால் மேற்படி கஷ்டம் நன்கு புலனாகும். ஏன்? தமிழ் மொழியில் எவ்வளவோ ஆர்வமுள்ள மகாத்மாவினாலேயே எவ்வளவு தூரம் தமிழ் கற்க முடிந்திருக்கிறது?

"இளமையிற் கல்" என்னும் முதுமொழியானது முக்கியமாக இன்னொரு பாஷையைக் கற்கும் விஷயத்தில் நன்கு பொருந்தும். இதை யறிந்துதான் ராஜாஜி இந்த மாகாணத்தில் பிரதம மந்திரியாயிருந்த போது பள்ளிக்கூடங்களில் கட்டாயமாக ஹிந்தி கற்பிக்க ஏற்பாடு செய்தார். அப்போது ஏற்பட்ட பல நல்ல திட்டங்களைப் போல் அதுவும் அற்பாயுஸ் திட்டமாகப் போயிற்று.

* * *

இப்படி யெல்லா மிருந்த போதிலும்,—அதாவது, பிராயம் வந்தவர்கள் பிற பாஷை கற்பதில் எவ்வளவோ கஷ்டம் இருந்த போதிலும்,—மகாத்மா காந்தியின் விருப்பத்தை முன்னிட்டும், அகில இந்தியாவின் ஒற்றுமையை முன்னிட்டும் தென்னிந்தியர், முக்கியமாகத் தமிழ் மக்கள், ஹிந்துஸ்தானி கற்றுக் கொள்வதற்கு ஒரு பெரும் பிரயத்தனம் செய்தேயாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

ஊக்கத்துடன் மனம் வைத்துப் பிரயத்தனம் செய்தால் முடியாத காரியமல்ல என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம் நாம் சொல்ல முடியும். தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசி ஸ்ரீ என். அண்ணாமலைப் பிள்ளை அவர்கள் சமீபத்தில் ஹிந்துஸ்தானி பரீட்சையில் தேறி அத்தாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறார்! ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளை அவர்கள் சாதித்த காரியம் மற்றவர்களுக்கு ஏன் கைகூடாமல் போக வேண்டும்? உண்மையான ஊக்கமும் விடா முயற்சியுந்தான் தேவை.

ஹிந்துஸ்தானி பிரசாரத்தினாலோ, ஹிந்துஸ்தானி கற்பதினாலோ நமது தாய் மொழிக்கு எத்தகைய பாதகமும் நேரிடாது என்பது பலமுறை வற்புறுத்தப் பட்டிருக்கிறது.

காந்தி மகாத்மாவும் சமயம் நேரும் போதெல்லாம் தாய் மொழியின் முக்கியத்தை வற்புறுத்தி வருவதைப் பார்க்கிறோம். "தாய் மொழிக்குத்தான் முதன்மை ஸ்தானம்; தேசிய பாஷைக்கு அடுத்த முக்கிய ஸ்தானந்தான்" என்று மகாத்மா அடிக்கடி சொல்லி வருகிறார். தேசிய பாஷையானது தாய் மொழியின் இடத்தை ஆக்கிரமிப்பதையோ, அதனால் தாய்மொழி எந்த விதத்திலும் பாதகம் அடைவதையோ மகாத்மா ஒரு நாளும் விரும்ப மாட்டார்.

எனவே, தமிழ் மக்கள் ஹிந்துஸ்தானி பாஷை கற்பதில் முன்னைக் காட்டிலும் அதிக சிரத்தை கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். தேசிய பாஷை கற்பதற்கு ஏற்கனவேயுள்ள பல காரணங்களோடு இப்போது ஒரு புதிய காரணம் சேர்ந்திருக்கிறது. இந்தத் தடவை மகாத்மா சென்னைக்கும் தமிழ் நாட்டுக்கும் விஜயம் செய்து பல தினங்கள் தங்கித் தரிசனம் தந்ததின் ஞாபகார்த்தமாகத் தமிழ் மக்கள் அவசியம் ஹிந்துஸ்தானி பாஷையைக் கற்றுக் கொண்டேயாக வேண்டும். மகாத்மா காந்தி இறைவன் அருளால் இன்னொரு தடவை தமிழகத்துக்கு விஜயம் செய்யும்போது தமிழர்களின் ஹிந்துஸ்தானி அறிவைப் பார்த்து "ரொம்ப ரொம்ப அச்சா ஹை!" என்று அத்தாட்சி தரும்படியாக இடைவிடாத பிரயத்தனம் செய்ய வேண்டும்.

திணற அடித்தார்!

உச்சிமேடு வரையில் நம்மைத் தூக்கி வாரிப் போடும்படியாகவும், உடம்பின் எலும்பு நரம்பு எல்லாவற்றையும் அலக்கிக் குலுக்கி விடும்படியாகவும், மூச்சே நின்றுபோகும் படியாகவும் தமிழ் நாட்டில் ஒரு மனுஷர் அடிக்கடி காரியம் செய்கிறார்!

டாக்டர் ஸர் அளகப்பச் செட்டியார் அவர்களைத்தான் சொல்கிறோம்.

நல்ல காரியங்களுக்கு அவர் திடீர் திடீரென்று கொடுக்கும் பெரிய பெரிய நன்கொடைகள் தான் நம்மை அப்படியெல்லாம் திகைத்துத் திணற அடிக்கின்றன.

பழந் தமிழ் நாட்டின் பிரசித்தி பெற்ற வள்ளல்களைப் பற்றிக் கதைகளிலே படித்திருக்கிறோம். அவை யெல்லாம் கொஞ்ச காலத்துக்கு முன்பு வரையில் வெறும் கதைகளாகவே இருந்து வந்தன.

வடநாட்டிலே பெருந் தனிகர்கள் அவ்வப்போது நல்ல தர்ம காரியங்களுக்குப் பெருந்தொகை நன்கொடை அளித்ததாகப் பத்திரிகைகளில் படிக்கும் போதெல்லாம் நமக்கு என்னமோ மாதிரி இருக்கும்!

"அம்மாதிரி யெல்லாம் வடநாட்டிலே தான் நடக்கக் கூடும். தமிழ் நாட்டில் அப்படிப்பட்ட தனிகர்கள் எங்கே இருக்கிறார்கள்? அவ்வளவு தாராள குணமுள்ளவர்கள் தான் எங்கே இருக்கிறார்கள்?" என்று சொல்லிப் பெருமூச்சு விடுவோம்.

இதை யெல்லாம் பழங் கதையாகச் செய்துவிட்டார் வள்ளல் அளகப்பச் செட்டியார்! அதோடு பழந் தமிழ் இலக்கியங்களிலே படித்த வள்ளல்களைப் பற்றிய கதையை யெல்லாம் உண்மையாகவும் ஆக்கி விட்டார்.

அவர் கடைசியாகச் செய்துள்ள திணற அடிக்கும் தர்மத்தைப் பற்றி நேயர்கள் தினசரிப் பத்திரிகைகளில் படித்திருப்பார்கள்.



ஹரிஜன சேவா சங்கத்தார் தியாகராய நகரில் ஏற்படுத்த உத்தேசித்திருக்கும் ஹரிஜனத் தொழிற் கலாசாலைக்கு நிலம் வாங்குவது முதல் கட்டிடம் கட்டித் தருவது வரையில் எல்லாச் செலவுகளையும் ஏற்றுக் கொள்வதாக காந்தி மகாத்மாவிடம் டாக்டர் அளகப்பச் செட்டியார் ஒப்புக் கொண்டிருப்பதைத்தான் குறிப்பிடுகிறோம்.

மகாத்மாவின் மனதுக்குகந்த மேற்படி திருப்பணிக்கு மொத்தம் மூன்று லட்ச ரூபாய் செலவு ஆகுமென்றும் அறிகிறோம்.

* * *

மேற்படி மகத்தான நன் கொடையைப் பற்றிய வியப்பும் திகைப்பும் நமக்கு தீர்வதற்குள்ளாகவே, தேசபக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் ஞாபகார்த்த நிதிக்கு அரிய நன்கொடை அளித்து வள்ளல் அளகப்பச் செட்டியார் நம்மை மேலும் திணற அடித்திருக்கிறார் என்பதைக் குதூகலத்துடன் நேயர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

மேற்படி நிதிக்கு இதுவரை கிடைத்திருக்கும் நன்கொடைத் தொகைகள் எல்லாவற்றையும்விடப் பெரிய தொகை, ரூ. 5,00[1] (ரூபாய் ஐயாயிரத்து ஒன்று) டாக்டர் அளகப்பச் செட்டியார் அளித்திருக்கிறார்.

இந்த அரிய வள்ளன்மையின் பொருட்டு மேற்படி வ. உ. சி. ஞாபகார்த்தக் கமிட்டியின் சார்பாகவும் தமிழ் மக்களின் சார்பாகவும் நமது சொந்த முறையிலும் வள்ளல் அளகப்பச் செட்டியாருக்கு மனமார்ந்த நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

* * *

மேற்படி நிதிக்கு இதுவரை மொத்தம் ரூ. 21,000 சொச்சம் வசூலாகியிருப்பதாக ஞாபகார்த்தக் கமிட்டியின் காரியதரிசி ஸ்ரீ பெ. கந்தசாமிப் பிள்ளை சில நாளைக்கு முன்பு பத்திரிகைகளுக்கு அறிவித்திருந்தார். வள்ளலின் நன்கொடையுடன் 26,000 ஆகிறது. ஆனால் ஞாபகார்த்த நிதிக் கமிட்டியின் இலட்சியம் ஒரு லட்சம் ரூபாய் என்பதைத் தமிழ் மக்களுக்கு, — இலங்கையிலிருந்து ராவல்பிண்டி வரையில் உள்ள தமிழர்களுக்கு,— ஞாபகப் படுத்த விரும்புகிறோம். தேசத்துக்காகச் சகல வாழும் தியாகம் செய்த தமிழ் நாட்டு ஆதி தேசபக்தரின் ஞாபகத்துக்காக ஒரு லட்சம் ரூபாய் கொடுப்பது ஒரு பெரிய காரியமல்ல என்பதையும் நினைவூட்டுகிறோம்.

சிவகாமியின் சபதம்

கல்கி

அத்தியாயம் 18

உறங்கா இரவு

அரண்மனைப் பூங்காவனத்தி ருந்து திரும்பிப் புவனமகா தேவியின் ரண்மனைக்கு வந்த மங்கையர்க்கரசி ன்று மாலை யெல்லாம் தரையிலே க்கவில்லை. ஆனந்த வெள்ளத்திலே ருந்து கொண்டிருந்தாள். அதற்குக் ரணம் இல்லாமற் போகவில்லை. வள் சற்றும் எதிர்பாராத காரியம் ந்து விட்டது. அத்தகைய பாக் யம் தனக்குக் கிட்டும் என்பதாக வள் கனவிலும் எண்ணவில்லை. வளுடைய தந்தை போர்க்களத்திற் ப் போன பிறகு அவளுடைய ழ்க்கையே சூனியமாகப் போயிருந் து. அந்தச் சூனியத்தை நிரப்பி வளுடைய வாழ்க்கையை இன்ப மாக்கக் கூடியதான சம்பவம் ாறே ஒன்றுதான். அந்த அற் தம் அன்றைக்கு நடந்து விட்டது. வளுடைய உள்ளத்தையும் உயிரை ம் கவர்ந்திருந்த காதலன்,—இனி ல் எந்தக் காலத்திலாவது காணப் ாகிறோமா என்ற ஏக்கத்தை அவள் தில் உண்டாக்கி யிருந்ததோடு வளுடைய கனவினில் அடிக்கடி ான்றித் தூக்கத்திலும் அமைதி ன்றிச் செய்துவந்த சுந்தர புருஷன், ளிதில் யாரும் பிரவேசிக்க முடியாத ந்தப் பல்லவ அரண்மனைக்குள்ளே வளைத் தேடி வந்து சந்தித்தான். தித்ததோடல்லாமல் அவளிடம் ாது இடையறாக் காதலையும் சிறிதும் சந்தேகத்துக்கு இடமின்றி வெளி ட்டான்.

அவளுடைய வாழ்க்கையை ஆனந்த மாக்கக் கூடிய பேறு இதைக் ட்டிலும் வேறு என்ன இருக் கிறது? அவளுடைய கால்கள் தரையிலே படியாமல், நடக்கும்போதே நடனமாடிக் கொண்டிருந்ததில் வியப்பு என்ன இருக்கிறது?

இந்த அற்புத சம்பவத்தைப் பற்றி யாரிடமாவது சொல்ல வேண்டுமென்று அவளுடைய உள்ளம் துடித்துக்கொண்டிருந்தது. ஆனால், யாரிடம் சொல்வது? சொல்வதானால், தன்னைப் புதல்வியெனக் கொண்டு அன்பு செலுத்தி வரும் புவனமகா தேவியிடந்தான் சொல்ல வேண்டும். ஆனால், அன்று மாலை புவனமகா தேவியின் முகபாவமும் சுபாவமும் ஓரளவு மாறியிருந்தது. தன் அந்தரங்கத்தை வெளியிட்டுப் பேசக் கூடிய நிலைமை இல்லையென்பதை மங்கையர்க்கரசி கண்டாள். சிவ பூஜையின்போது கூடத் தேவியின் திருமுகத்தில் வழக்கமான சாந்தமும் புன்னகையும் பொலியவில்லை. மங்கையர்க்கரசியிடம் அவர் இரண்டொரு தடவை அகாரணமாகச் சிடு சிடுப்பாகப் பேசினார். மற்ற நாளாயிருந்தால் தேவி அவ்விதம் சிடு சிடுப்பாகப் பேசியது மங்கையர்க்கரசியின் உள்ளத்தை வெகுவாக வருத்தப்படுத்தியிருக்கும். ஆனால் இன்று ஆனந்த வெள்ளத்தில் மிதந்த மங்கையர்க்கரசி அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. தன் மனதில் பொங்கி வந்த குதூகலத்தைத் தேவியிடம் பகிர்ந்து கொள்ள முடியவில்லையே என்று மட்டுந்தான் அவள் கவலைப்பட்டாள்.

இருட்டி ஒன்றரை ஜாம நேரம் ஆனபோது, மங்கையர்க்கரசி வழக்கம்

போல் புவனமகா தேவியின் படுக்கை யறைக்குப் பக்கத்தில் தனக்கென்று அளிக்கப்பட்டிருந்த அறையில் படுத்துக் கொண்டாள். ஆனால் உறக்கம் மட்டும் வரவே யில்லை. கண்ணிமைகள் மூடிக் கொள்ளவே மறுத்து விட்டன. துயரத்தினாலும் கவலையினாலும் தூக்கம் கெடுவதைக் காட்டிலும் எதிர்பாராத சந்தோஷத்தினாலும் உள்ளக் கிளர்ச்சியினாலும் உறக்கம் அதிகமாகக் கெடும் என்பதை அன்று மங்கையர்க்கரசி கண்டாள். சற்று நேரத்துக்கெல்லாம் தூங்கும் முயற்சியையே விட்டு விட்டுத் தன் வருங்கால வாழ்க்கையைப் பற்றிய மனோராஜ்யங்களில் ஈடுபட்டாள்.

இவ்விதம் இரவின் இரண்டாவது ஜாமம் முடிந்து மூன்றாவது ஜாமம் ஆரம்பமாயிற்று.

அந்த நடு நிசி வேளையில், நிச்சப்தம் குடிகொண்டிருந்த அந்த அரண்மனையில், திடீரென்று கேட்ட ஒரு சத்தம் மங்கையர்க்கரசியைத் தூக்கி வாரிப் போட்டது. அது வெகு சாதாரண இலேசான சத்தந்தான். வேறொன்றுமில்லை; ஏதோ ஒரு கதவு திறக்கப்படும் சத்தம். ஆயினும் அந்த வேளையில் அத்தகைய சத்தம் மங்கையர்க்கரசிக்கு ஏதோ ஒருவித காரணமில்லாத பயத்தை உண்டாக்கியது. ஒரு வேளை ...... அவர்தான் வருகிறாரோ என்று ஒரு கணம் நினைத்தாள். "இல்லை, இல்லை! அவ்வளவு அனுசிதமான காரியத்தை அவர் செய்ய மாட்டார்" என்று மனதைத் தைரியப்படுத்திக் கொண்டாள். அன்று மாலையெல்லாம் புவனமகாதேவியின் மனத்தில் என்றுமில்லாத கவலைக் குறி காணப்பட்ட விஷயம் ஞாபகம் வந்தது. பாண்டிய குமாரனுடைய வரவைக் குறித்து அவர் இரண்டு தினங்களுக்கு முன்பு கவலையோடு பேசியதும் நினைவு வந்தது.

ஆனால் அதைப் பற்றி அதிக நேரம் எண்ணமிட்டுக்கொண்டிருக்க மங்கையர்க்கரசிக்கு அவகாசம் கிடைக்கவில்லை. அவள் படுத்திருந்த அறைக்கு வெளியே தாழ்வாரத்தில் மெல்லிய காலடிகளின் சத்தம் அவள் கவனத்தைக் கவர்ந்தது. அந்த நேரத்தில் புவனமகா தேவியின் அறைக் கருகே அவ்விதம் நடமாடத் துணிந்தது யாரா

யிருக்கும்? இன்னதென்று தெ
வாய்த் தெரியாத நிலையில் கொண்
உள்ளத்துடன் மங்கையர்க்கரசி த
படுக்கையில் எழுந்து உட்கார்ந்தா
காலடிச் சத்தம் மேலும் மேலு
நெருங்கித் தன் அறைக்குச் சமீபத்
வருவதாகத் தோன்றியது. அப்
வருவது யார் என்று தெரிந்துகொள்
வேண்டுமென்ற அளவில்லா ஆ
அவளைப் பிடித்தது. சத்தம் செய்
மல் படுக்கையிலிருந்து எழுந்து
ளுடைய அறையிலிருந்து வெ
தாழ்வாரத்தை நோக்கிய பலக
யின் அருகே சென்று வெளியிலிரு
தன்னைப் பார்க்க முடியாதபடி ம
வாக நின்றாள். மறுகணமே அ
டைய ஆவல் நிறைவேறியது. த
வாரத்தில் இருவர் வந்து கொண்டி
தார்கள். முன்னால் கையில் தி
ஏந்திய தாதிப் பெண்ணும் அவ
குப் பின்னால் வானமா தேவியும் வ
கொண்டிருந்தார்கள். ஆம்!
வானமா தேவிதான்! ஆனால் அ
டைய முகம் ஏன் அப்படிப் பேயடி
முகத்தைப் போல், வெளுத்து வி
றைடைந்து போயிருக்கிறது! ஐயோ
என்ன பயங்கரம்!

அவ் விருவரும் மங்கையர்க்கரசி
அறையைத் தாண்டி அப்பால் போ
தும் சற்றுத் தூரத்தில் அதே த
வாரத்தின் மறுபுறத்தில் திறந்திரு
ஒரு கதவு மங்கையர்க்கரசிய
கண்ணையும் கவனத்தையும் கவர்ந்த
அவள் இந்த அரண்மனைக்கு வ
நாளாக மேற்படி கதவு திறக்கப்
டதைப் பார்த்ததில்லை. வான
தேவியின் மாளிகையிலிருந்து இ
மாளிகைக்கு வருவதற்கான சுர
வழியின் கதவு அது என்று அ
கேள்விப்பட்டிருந்தாள். அந்
சுரங்க வழி மூலமாகத்தான் வான
தேவி இப்போது வந்திருக்க வேண்
இந்த நடுநிசியில் அவ்வளவு இரக
மாகச் சுரங்க வழியின் மூலம் அ
எதற்காக வந்திருக்கிறார்?

இந்தக் கேள்விக்கு மறுமொழி அ
ளுக்கு மறுகணமே கிடைத்தது. வ
வர்கள் இருவரும் புவனமகா தேவியி
படுக்கை அறை வாசற் கதவண்
நின்றார்கள். கையில் விளக்கு
வந்த தாதிப் பெண் கதவை இ
சாகத் தட்டினாள். உள்ளே யிரு

ர்?" என்ற குரல் கேட்டது. "நான்தான், அம்மா!" என்றார் வானமா தேவி. "இதோ வந்து விட்டேன்!" என்னும் குரல் கேட்ட மறுகணமே கதவும் திறந்தது. நாதிப் பெண்ணை வெளியிலே நிறுத்தி விட்டு வானமா தேவி உள்ளே சென்றார்.

வானமா தேவியின் பயப் பிராந்தி கொண்ட வெளிறிய முகத்தைப் பார்த்த மங்கையர்க்கரசியின் மனதில் சொல்ல முடியாத கவலையோடு பயமும் கொண்டது. பூரண சந்திரனை ஒத்த பிரகாசமான பல்லவ சக்கரவர்த்தினியின் வதனம் நாலு நாளைக்குள் அப்படி மாறிப் போயிருக்கும் காரணம் என்ன? அவருக்கு அத்தகைய கவலையையும் பயத்தையும் உண்டாக்கும் அந்த விபரீதம் என்ன? சக்ரவர்த்தி போர்க்களத்துக்குப் போனபிறகு கூட வானமா தேவி எவ்வளவோ தைரியமாகவும் உற்சாகமாகவும் இருந்தாரே? அதைப் பற்றித்தான் ஆச்சரியப் பட்டதும் உண்டல்லவா! அப்படிப் பட்டவரை இவ்வளவும் மாற்றும்படியாக எத்தகைய அபாயம் எதிர் நோக்கி வந்து கொண்டிருக்கிறது? அந்த அபாயம் அவரோடு மட்டும் போகுமா? அல்லது இந்த அரண்மனையில் உள்ள மற்றவர்களையும் பிடிக்குமா?

பட்டிக்காட்டில் பிறந்த கள்ளங் கபடற்ற பெண்ணாகிய மங்கையர்க்கரசிக்கு மேற்படி விஷயத்தைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு ஒட்டுக் கேட்பது ஒரு பிசகான காரியமாகவே தோன்றவில்லை. எனவே, புவனமகா தேவியின் அறைக்கும் தன்னுடைய அறைக்கும் மத்தியிலிருந்த கதவண்டை சென்று நின்று மாமிக்கும் மருமகளுக்கும் நடந்த சம்பாஷணையை ஒட்டுக் கேட்கத் தொடங்கினாள்.

அந்தச் சம்பாஷணையின் ஆரம்பமே அவளுடைய மனதில் என்றுமில்லாத திகிலை உண்டாக்கி உடம்பெல்லாம் நடுங்கும்படி செய்தது. போகப் போக அவள் காதில் விழுந்த விவரங்கள் சொல்லமுடியாத வியப்பையும் எல்லையில்லாத பீதியையும் மாறி மாறி அளித்து, சில சமயம் அவள் உடம்பில் இரத்தம் கொதிப்பது போலவும், சில சமயம் அவளுடைய இருதயத் துடிப்பு நின்று போவது போலவும், சில சமயம் அவளுடைய தலை படீரென்று வெடித்துப் பிளந்து விடுவது போலவும் உணர்ச்சிகளை உண்டாக்கின. அப்படியெல்லாம் அந்தப் பேதைப் பெண்ணைக் கலங்கச் செய்து வேதனைக்குள்ளாக்கிய சம்பாஷணையின் விவரம் இதுதான்:

"அம்மா! ஒருவேளை தூங்கிப் போய் விட்டீர்களா?"

"மகளே! நீ சொல்லி யனுப்பியிருக்கும்போது எப்படித் தூங்குவேன்? உன் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தேன். ஆனால் இது என்ன மர்மம்? எதற்காக இப்படி நடு ராத்திரியில் வந்தாய்? உன் முகம் ஏன் இப்படி வெளுத்துப் போயிருக்கிறது? ஐயோ! பாவம்! பல நாளாக நீ தூங்கவில்லை போலிருக்கிறதே?"

"ஆம், அம்மா! நெடுமாறன் என் அரண்மனைக்கு என்றைக்கு வந்தானோ அன்றைக்கே என்னை விட்டுத் தூக்கமும் விடை பெற்றுக் கொண்டுபோய் விட்டது......தாயே! பக்கத்து அறைகளில் யாராவது இருக்கிறார்களா? நாம் பேசுவது யாருடைய காதிலாவது விழக்கூடுமா?"

"இது என்ன பயம், மகளே? யார் காதில் விழுந்தால் என்ன? யாருக்காக நீ பயப்படுகிறாய்? எதை உத்தேசித்துப் பயப்படுகிறாய்? பல்லவ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினி,— சத்துருமல்லரின் மருமகள்,—மாமல்ல நரசிம்மனின் பட்டமகிஷி,—யாருக்காக இப்படிப் பயப்பட வேண்டும்?"

"யாருக்காக நான் பயப்படுகிறேன் என்று கேட்கிறீர்கள், அம்மா! நமது அரண்மனையில் உள்ள ஒவ்வொரு பணியாளிடமும் ஒவ்வொரு பணிப் பெண்ணிடமும் பயப்படுகிறேன்."

"அப்படியானால் உன் பின்னோடு அழைத்து வந்தாயே, அவள்?"

"செவிடும் ஊமையுமாக இருப்பவளைப் பார்த்து அழைத்து வந்தேன்!"

"மகளே! இது என்ன பேச்சு? இது என்ன பயம்! உன்னுடைய பணிப் பெண்களிடமே நீ பயப்படும்படியான அவசியம் என்ன நேர்ந்தது? வீர பாண்டியர் குலத்திலே பிறந்து வீர பல்லவர் வம்சத்தில் வாழ்க்கைப் பட்டவள் இத்தகைய பயத்துக்கு ஆளாகலாமா? இது என்ன அவமானம்?"

"அம்மா! இதிலுள்ள மானுவமானமெல்லாம் பாண்டிய குலத்துக்குத்தான்; பல்லவ குலத்துக்கு ஒன்றுமில்லை. என் அரண்மனைப் பணிப்பெண் ஒருத்தி சமணர்களுடைய வேவுகாரியாகி என் அண்ணன் மகனுக்கும் சமணர்களுக்கும் நடுவே தூது போய் வருகிறாள் என்று அறிந்தேன், அம்மா! அவள் வந்து சொன்ன செய்தியின் பேரில் நேற்றிரவு நடுநிசியில் நெடுமாறன் சமண சித்தர்களின் அந்தரங்க மந்திரக் கூட்டத்துக்குப் போய் விட்டு வந்தான்......"

"ஆ மகனே! இது என்ன விந்தை? காஞ்சி நகரில் இன்னும் சமணர்கள் தங்கள் காரியங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்களா?"

"ஆம், தாயே! நெடுமாறனைத் தொடர்ந்து, அவர்களும் வந்திருக்கிறார்கள். நெடுமாறன் அவர்களைப் பார்க்கப் போனபோது நடந்த காரியங்களைக் கேட்டால் இன்னும் தாங்கள் பயங்கர மடைவீர்கள்."

"என்ன நடந்தது, மகனே!"

"நெடுமாறனுடைய மனதைக் கெடுப்பதற்காக என்ன வெல்லாமோ அவர்கள் மந்திர தந்திரங்களைக் கையாளுகிறார்களாம். பாவம்! நெடுமாறனுடைய புத்தி அடியோடு பேதலித்துப் போயிருக்கிறது, அம்மா!"

"ஆனால் சமணர்களுடைய நோக்கந்தான் என்ன? நெடுமாறனுடைய மனதைக் கெடுத்து என்னதான் செய்யலாம் என்று அவர்களுடைய உத்தேசம்?"

"யாரோ ஒரு பையனை மந்திர சக்தியால் மயக்கி வருங் காலத்தில் வரப் போவதை அகக் கண்ணால் கண்டு சொல்லச் சொன்னார்களாம். வாதாபி யுத்தத்தில் வெற்றி யடைந்தவுடனே தங்களுடைய புதல்வர் நெடுமாறன் மீது பொறாமை கொண்டு அவனைக் கத்தியால் வெட்டிக் கொல்வதாக அவன் கண்டு சொன்னானாம்!"

"ஐயோ! இது என்ன பயங்கரம்? அப்புறம்?"

"ஆனால் அந்த விதியையும் சமண சித்தர்களின் சக்தியால் மாற்றலாம் என்று அவர்கள் சொன்னார்களாம். அவர்களின் விருப்பத்தின்படி நடந்தால் நெடுமாறனைத் தக்ஷிண தேசத்தின் ஏக சக்ராதிபதியாக இந்தக் காஞ்சியிலேயே பட்டாபிஷேகம் செய்து வைப்பதாகச் சொன்னார்களாம்!"

"இதெல்லாம் உனக்கு எப்படி தெரிந்தது, மகனே!"

"நமது ஒற்றர் தலைவன் சத்ருக்ன எல்லாவற்றையும் ஒளிந்திருந்து பார்துக் கொண்டிருந்தானாம்."

"ஆகா! மகேந்திர பல்லவர் மீ பழி தீர்த்துக் கொள்ளச் சமணர்க நல்ல சந்தர்ப்பத்தைத்தான் தேடி கொண்டிருக்கிறார்கள்!"

"அம்மா! ஆனால் அவர்கள் உ மையில் சமணர்கள் அல்லவா வாதாபியின் ஒற்றர்கள் நெடுமா னுக்குச் சமண மதத்தில் உள் பற்றை அறிந்து சமணர்களைப்போ வேஷம் போட்டுக் கொண்டு இந் தந்திர மந்திர மெல்லாம் செ கிறார்களாம்!"

"அப்படியானால் அவர்களை உடனே சிறை பிடிப்பதற்கு என்ன?"

"சிறைபிடித்தால் அதனால் அபாய வரலாமென்று சத்ருக்னன் பயப் கிறான். பாண்டிய சைன்யத் உடனே காஞ்சியைக் கைப்பற்றும்ப நெடுமாறன் சொல்லலாமென்று காரியம் மிஞ்சி விபரீதமாகிவிடும் எ றும் அஞ்சுகிறான்."

"வேறு என்ன யோசனைதா சத்ருக்னன் சொல்கிறான்?"

"அவனுக்கு ஒன்றும் சொல் தெரியவில்லை, தாயே! உடனே சக் வர்த்திக்குச் செய்தி அனுப்ப வேண் என்கிறான். ஆனால், என் நாதர் பு படும்போது அவருக்கு நான் வாக் கொடுத்திருக்கிறேன். அதை நி வேற்றியே தீருவேன். தங்களிடம் அ மதி பெற்றுப் போகத்தான் வந்தேன்."

"அப்படியா? மாமல்லனுக்கு என்ன வாக்குறுதி கொடுத்தாய்?"

"நெடுமாறனால் ஏதாவது கெடு நேருவதா யிருந்தால் என் கைய அவனுக்கு விஷத்தைக் கொடுப்பே இல்லாவிட்டால் அவனைக் கத்திய குத்திக் கொல்வேன் என்று வாக்கு கொடுத்தேன்."

"ஆ! இது என்ன பாவம்? உ தலையில் இவ்வளவு பெரிய பாரத் வைத்துவிட்டு என் மகன் எப்ப புறப்பட்டுப் போனான்?"

"அம்மா! என்னிடம் அவர் ந பிக்கை வைத்துச் சென்றார். அ நம்பிக்கையை உண்மையாக்குவேன்"

"குழந்தாய்! இன்னும் அறு நாழிகை நேரம் எனக்கு அவகா

காடு! சத்ருக்னனையும் இலங்கை ளவரசனையும் கண்டு பேசிவிட்டு னக்கு முடிவாக என் யோசனையைச் சால்கிறேன்."

"அம்மா! அடுத்த அறையில் யார் இருக்கிறது? ஏதோ சத்தம் கேட்பது பால் தோன்றியது."

"இந்த அரண்மனையைப் பற்றி நீ ந்தேகிக்க வேண்டாம். இங்கு ரும் அப்படிப்பட்டவர்கள் இல்லை."

"அப்படியா நினைக்கிறீர்கள்? இன்று யங்காலம் நடந்ததைக் கேட்டால் ச்சரியப்பட்டுப் போவீர்கள்."

"சாயங்காலம் என்ன நடந்தது?"

"நெடுமாறன் பூந்தோட்டத்தில் உலாவிவிட்டு வருவதாகச் சொல்லிப் போனான். வெகு நேரம் அவன் திரும்பி வராமலிருக்கவே எனக்கு ஏதோ சந்தேகமாயிருந்தது. அவனைத் தேடிக்கொண்டு நான் சென்றேன். பூங்காவனத்தில் செடிகள் அடர்ந்திருந்த ஓரிடத்தில் நெடுமாறனும் ஒரு பெண்ணும் நின்று அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பெண் யார் தெரியுமா?"

"யார்?"

"தாங்கள் சுவீகாரப் புதல்வியாகக் கொண்டு அன்புடன் ஆதரித்து வளர்க்



கிறீர்களே, அந்தச் சோழ நாட்டுப் பெண்தான்!''

''என்ன? மங்கையர்க்கரசியா?''

''ஆம், தாயே! மங்கையர்க்கரசியே தான்!''

''மகனே! நீ யாரைப் பற்றி என்ன சொன்னாலும் நம்புகிறேன். ஆனால், அந்தச் சோழ நாட்டுப் பெண்ணைப் பற்றி மட்டும் ஒரு நாளும் சந்தேகிக்க மாட்டேன்.''

''ஆனால் என் கண்ணாலேயே பார்த்தேன், அம்மா!''

''கண்ணாலே என்ன பார்த்தாய்? இருவரும் பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்தாய். அவ்வளவுதானே? இவள் பூஜைக்கு மலர் எடுக்கப் போயிருந்தாள். தற்செயலாய் நெடுமாறன் அங்கு வந்திருப்பான்; ஏதாவது விசாரித்திருப்பான். இவளும் யாரோ பாண்டிய நாட்டு வாலிபனைப் பற்றி விசாரிக்க வேணுமென்று சொல்லிக் கொண்டிருந்தாள் ......''

''அவர்களுடைய நடவடிக்கைகள் மிக்க சந்தேகாஸ்பதமாய் இருந்தது, அம்மா!''

''இப்போதுள்ள உன்னுடைய மனோ நிலையில் யாரைப் பற்றியும் உனக்குச் சந்தேகம் தோன்றலாம்.''

''எல்லாவற்றிற்கும் கொஞ்சம் கண்காணித்து வையுங்கள்.''

''ஆகட்டும்; நானே காலையில் அவளிடம் விசாரித்து உண்மையை அறிந்து சொல்கிறேன்.''

''போய் வருகிறேன், அம்மா! தங்களிடம் சொன்ன பிறகு என் இருதயத்தை அமுக்கிக் கொண்டிருந்த பாரம் கொஞ்சம் குறைந்திருப்பது போல் தோன்றுகிறது.''

''போய் வா! குழந்தாய்! மீனாக்ஷி அம்மன் அருளால் உன்னுடைய இருதயத்தின் பாரம் முழுதும் நீங்கட்டும்.''

இதன் பிறகு கதவு திறந்து மூடும் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து காலடிச் சத்தமும் மறுபடியும் கதவு திறந்து மூடும் சத்தமும் கேட்டன. பிறகு, அந்த அரண்மனையில் ஆழ்ந்த நிசப்தம் குடி கொண்டது.

* * *

மேற்படி சம்பாஷணை முழுவதையும் கேட்டுக்கொண்டு சித்திரப் பதுமை போல் கதவண்டை நின்ற மங்கையர்க்கரசி அன்றிரவு முழுதும் ஒரு கண நேரங் கூடக் கண்ணை மூடவில்லை. இதற்குமுன் விளங்காத பல மர்மங்கள் மேற்படி சம்பாஷணையின் மூலம் அவளுக்குத் தெரியவந்தன. பாண்டிய குமாரன்தான் தன்னுடைய காதலன் என்ற செய்தி அவளுக்கு எல்லையற்ற உவகையையும் வியப்பையும் அளித்தது. தான் அவனைப் பற்றி அடிக்கடி கண்ட கனவின் பொருள் ஒருவாறு விளங்கிற்று. அவனுக்கு அந்த அரண்மனையில் நேர்வதற்று இருந்த பேரபாயம் அவளுக்குச் சொல்ல முடியாத திகிலையும் கவலையையும் அளித்தது. அந்தப் பேரபாயத்திலிருந்து அவனை தப்புவிக்கும் பொறுப்பும் பாக்கியமும் தனக்குரியவை என்பதையும் உணர்ந்தாள். இம்மாதிரி எண்ணங்கள் அவளுக்கு இரவு முழுதும் ஒரு கணமும் தூக்கமில்லாமல் செய்து விட்டன.


மறுநாள் காலையில் புவனமகா தேவி கேட்டபோது, முதல் நாள் மாலை தன்னை ஒரு வாலிபன் பூங்காவனத்தில் சந்தித்தது உண்மை என்றும், வானமா தேவியின் மாளிகைக்கு அவன் வழி கேட்டதாகவும் மட்டும் சொல்லித் தப்பித்துக் கொண்டாள்.

பிறகு, மாலை நேரம் எப்போது வரப் போகிறது என்று ஒரே ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள். குறிப்பிட்ட சமயத்துக்குச் சற்று முன்னாலேயே பூங்காவனத்துக்குச் சென்று காத்திருந்தாள். நெடுமாறன் தென்பட்டதும் விரைந்து அவனை அணுகி ஒரே பரபரப்புடன், ''பிரபு! தங்களை இந்த அரண்மனையில் பேரபாயம் சூழ்ந்திருக்கிறது. உடனே போய் விடுங்கள்!'' என்று அலறினாள்.

நெடுமாறன் சிறிது வியப்புடன், ''என்ன சொல்கிறாய்? எனக்குப் பேரபாயம் வரப்போகிறது? இந்த ஏழைக்கு யாரால் என்ன அபாயம் நேரக் கூடும்?'' என்றான்.

''சுவாமி! என்னை இனியும் ஏமாற்ற நினைக்க வேண்டாம். தாங்கள் தான் பாண்டிய குமாரர் என்பதை அறிந்து கொண்டேன். உண்மையிலேயே தங்களுக்கும் இங்கே பேரபாயம் வருவதற்கு இருக்கிறது. உடனே போய் விடுங்கள் இந்த அரண்மனையை விட்டு!'' என்றாள் மங்கையர்க்கரசி.


சென்னை செய்த பாக்கியம்



ஹிந்தி பிரசார சபையின் வெள்ளி விழா ஆரம்ப வைபவத்துக்கு மகாத்மாஜி தமது ஜமாவுடன் புறப்பட்டு வருகிருர்! மகாத்மாஜியை நடத்திச் செல்லும் வீரத் தொண்டன், "அடே அப்பா! எத்தனை கூட்டம்! இந்தக் கூட்டத்தில் காந்தித் தாத்தாவைப் பத்திரமாய் அழைத்துக் கொண்டு போக வேண்டுமே?" என்று கவலையுடன் பார்க்கிருன்.


மகாத்மாஜியின் இருபுறத்திலும் வருபவர்கள் அவருடைய பேரன் கனுகாந்தியும் ஸ்ரீமதி கனுகாந்தியும்.










சென்னைமா நகரம் என்றைக்கும் கண்டறியாத காட்சிகளைச் சென்ற பத்து தினங்களாகக் கண்டு வருகிறது. லட்சக் கணக்கான ஸ்திரீகளும் புருஷர்களும் தினந்தோறும் மகாத்மாஜியின் மாலை வேளை பிரார்த்தனைக்காக வந்து கூடுகிறார்கள். மேலே உள்ள படத்தில் பெரும் பகுதி பெண்கள் மயமா யிருப்பதைக் காணலாம். கீழே காணப்படும் ஜன சமுத்திரத்தைப் போல் சென்னையின் சரித்திரத்தில் எப்போதும் கண்டது கிடையாது. ஆனாலும் இந்தப் பிரம்மாண்ட ஜன சமுத்திரம் அந்த மகா புருஷர் தம் கை விரலை உயர்த்தி, 'நிச்சப்த ஹோ!' என்று கூறியதும், மந்திர சக்தியால் அலை ஓய்ந்த சமுத்திரம்போல் அடங்கி நிச்சப்த மாகிவிடும் அற்புதம் நிகழ்ந்து வருகிறது.





னல்லாம் இடைவிடாத
வங்களினுல் களைப்புற்ற
தியை அவருடைய
மைப் பேத்திகள் திரும்ப
த்துச் செல்கின்றனர்.








நூற்றுக் கணக்கான பெ
மணிகள் நூற்கும் காட்சியை
மகாத்மாஜி பார்வை யிடுகிறா



3-வது பரிசுக் கதை



ரங்கூன் கடை

பூ. பாலகிருஷ்ணன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

4

தினந்தோறும் மாலை நேரங்களில் அவன் அவர்களது வீட்டிற்கு வருவது வழக்கமாகி விட்டது.

ஒவ்வொரு இரவும் அவனை அங்கேயே சாப்பிடும்படி அந்தப் பொற் கொடி வற்புறுத்துவாள்.

"இந்தச் சாக்கில் இன்னும் கொஞ்ச நேரம் இங்கே இருக்கலாமே!" என்று அவனும் ஒப்புக் கொள்வான்.

அங்கு வந்த ஒரு மாதத்திற்குள்ளேயே மணிப்புரி பாஷையைச் சுமாராகப் பேசக் கற்றுக் கொண்டு விட்டான் பாலு. அவளுக்கும் தமிழ் கொஞ்சம் கற்றுக் கொடுத்துக் கொண்டு வந்தான்.

இப்பொழுதெல்லாம் அவன் அவர்கள் வீட்டிற்குப் போனதும் அவள், "என்ன வேணும்?" "ஜலம் வேணுமா?" "உ. சாப்பிடறயா?" "சாதம் போடட்டுமா?" என்றெல்லாம் குசலம் விசாரிப்பது சர்வ சாதாரணமாகி விட்டது!

அவன் சிரித்துக் கொண்டே வேடிக்கையாக இந்தக் கேள்விகளைப் பொருத்த மில்லாமல் அடுக்கிக் கொண்டு போவதை வாயில் ஈ புகுவது தெரியாமல் பாலு கேட்டுக் கொண்டிருப்பான். அல்லது சொக்கி மௌன மிருப்பான்!

அவனும் விடவில்லை. "சா சாரபசா?" (சாப்பாடாயிற்று?) "சிக்கி" (காலணா) "பைசாயசி" (ஒரு அணா) என்று சம்பந்தா சம்பந்த மில்லாமல் வெளுப்பான்!

சாப்பிடும் பொழுது சமையலைப் புகழ்ந்து "நுக்ஷி!" (சபாஷ்! ரொம்ப நன்றாயிருக்கிறது) என்று கத்துவான்.

அவளது மணிப்புரி 'ஞான'த்தைக் கண்டு தன்னை மறந்து சிரித்து மகிழ்வாள் அவள்.

இவர்களது இந்தக் கேலி விளையாட் களில் அவளது தந்தையும் பங்கெடுத் கொள்வார்.

* * *

வாழ்க்கை ஆனந்த மயமாயிருக் போது நாட்கள் செல்வதே தெரிவதில் ஒரு மாதம் ஒரு நிமிஷமாகக் கழிந்து கிறது. ஆனால் துன்பகரமா யிருக் போதோ ஒரு நிமிஷம் போவது ஒரு யுக யிருக்கிறது. இந்த இரண்டாவது உ மையை பாலு ரங்கூனிலிருந்து திரு வரும் நாட்களில் உணர்ந்திருந்தான். மு உண்மையை இப்பொழுது உணர்ந்தான்.

நாட்கள், மாதங்கள் கழிந்தன. ப அங்கு வந்து ஐந்து மாதமாகிவிட்டது.

ஆனால் இதன் மத்தியில் ஒரு தரமா "என்னை விவாகம் செய்து கொ உனக்கு இஷ்டமா?" என்று பட்ட வர்த் மாக அவளைக் கேட்கவில்லை. எத்தனை சான் "இன்று கட்டாயம் இரண்டில் ஒ கேட்டுத் தெரிந்து கொண்டு விடலா என்று புறப்பட்டிருக்கிறான். ஆனால் அ நேரில் பார்த்ததும் அந்த எண்ண மறைந்துவிடும். எப்பொழுதும் பே பேசிக் கொண்டிருந்து விட்டுத் திரு விடுவான்.

இன்று கட்டாயம் கேட்டே விடு என்று தீர்மானித்துக் கொண்டு கிள னான். ஆமாம், இரண்டில் ஒன்று தெ வேண்டுமல்லவா?

அன்று அவன் ஸந்நதோங்பி வீட்டை அடைந்த பொழுது அவ தந்தை அங்கு இல்லை. எப்பொழு போல் அவள் அவனை வரவேற்று மையம் விஞல் செய்த ஒரு வகைப் பட்சண கொடுத்தாள். பாலு அவற்றைச் சாப்பிட் கொண்டே ராம பாணத்தை எப்பொழு விடுவது என்பதைப் பற்றித் தீவிர யோசித்துக் கொண்டிருந்தான்.

அவன் ஒரு வார்த்தையும் பேசாமல், ஒரு ...நக்வி" கூடச் சொல்லாமல் சாப்பிட்டுக் ...காண்டிருந்தது அவளுக்கு ஆச்சரியமா ...ருந்தது; அவன் முகத்தையே பார்த்துக் ...காண்டிருந்தாள்.

...திடீரென்று பாலு தனது முழு பலத்தை ...வரவழைத்துக் கொண்டு அந்த வெடி ...ண்டைப் போட்டான் :—

"ஜான் கா நுங்வி !" (நான் உன்னைக் ...தலிக்கிறேன் !)

இதைக் கேட்டதும் அவளது சப்த நாடி ...அசக்குவிடும், நாத் தழு தழுக்கும், வாய் ...றும், வெட்கத்தினால் தலை குனியும் என் ...ல்லாம் எதிர் பார்த்திருந்த பாலுவுக்குப் ...ரும் ஏமாற்றந்தான் உண்டாயிற்று.

அவள் ஒரே சிரிப்பு மயமாக ஆகிவிட் ...ள். உட்கார்ந்திருந்தவள் நின்றுகொண்டு ...க்க ஆரம்பித்தாள்.

'இவ்வளவு ஹாஸ்ய ரஸம் ததும்பும்படி ...நாம் என்ன சொல்லி விட்டோம்!" ...று அவன் வியர்த்து கொண்டிருக்கையில் ...ல வேளையாக அவளது தந்தை உள்ளே ...ழைந்தார்.

* * *

பெரியவர் உள்ளே சென்று உடை ...க் கழற்ற ஆரம்பித்தார்.

...லக்காதோங்பி ஒன்றும் தெரியாதவன் ...ல் பாலுவிடம், "நீ கொடுத்த ரங்கூன் ...டை மிகவும் உபயோகமா யிருக்கிறது. ...பாவின் பூஜைக்குப் புஷ்பங்களும் பழங் ...ம் வைக்க அதை உபயோகித்து வரு ...றன்" என்றான்.

பாலு பூஜை அறைக்குள் எட்டிப் பார்த் தான். அவள் சொன்னது நிஜந்தான். ரங்கூன் கூடை புஷ்பம் பழங்களுடன் பெரு மிதத்துடன் வீற்றிருந்தது.

ஆனால் 'சட்'டென்று பாலுவுக்குக் கோபம் கோபமாய் வந்தது. அந்த மகா வாக்கியத்திற்குப் பதில் சொல்லாமல் சிரித்து விட்டு இப்பொழுது பரம சாது போல் பேசுகிறாளே இந்தப் பெண்! என்ன சாகசம்!

"ஆமாம், நான் சொன்னதற்குச் சரியான பதில் சொல்லாமல் ஏன் அப்படிச் சிரித் தாய்? ஒரு நிமிஷத்தில் என்னைப் பைத்திய மாக்கி விட்டாயே!" என்று கேட்டான்.

"அட பாவமே, என் கருத்து இன்னும் உனக்குத் தெரிய வில்லையா? சொல்லித் தான் தெரிய வேண்டுமா?" என்று அந்தப் பொற்கொடி பதிலுக்கு ஒரு கேள்வி கேட் டாள்.

அவ்வளவுதான்! பாலு மேலே மேலே மேலே மேலே பறந்து சென்றான்! கந்தர்வ லோகத்திற்கே போய் விட்டான்!

ஆனால் ஒரே ஒரு கேள்வி கேட்பதற்காகக் கந்தர்வ லோகத்திலிருந்து இறங்கி வரும் படி ஆயிற்று!

"பின் ஏன் அப்படிச் சிரித்தாய்?" என்று கேட்டான்.

"நீ சொன்ன அதே வாக்கியத்தை இன்று நானும் உன்னிடம் சொல்ல வேண்டு மென்று தயாராய் இருந்தேன். ஆனால் நீ மௌனமாக ம. சாப்பிட்டதைப் பார்த்ததும் 'ஏதோ வேலை மிகுதி போல் இருக்கிறது, பின்னால் கேட்கலாம்' என்ற முடிவுக்கு வந்தேன். அதே நிமிஷத்தில்



நீடம் போட்டு உடைத்தாய்! இன்பமும் ஆச்சரியமும் சிரிப்பாகப் பரிணமித்து விட்டது" என்று மென்னகையுடன் கூறினான்.

இன்னும் நேரே ஒரு கேள்வி பாக்கியிருந்தது. அதையும் கேட்டு விட்டான்.

"சரி, உன் தந்தை இதற்கு ஒப்புக் கொள்வாரா?"

"அப்பாவுக்கு என் மேல் உயிர். நான் என்ன சொன்னாலும் மாறு சொல்ல மாட்டார். பயப்படாதே" என்று அபயப்ரதானம் அளித்தாள் அந்த அழகி.

* * *

அன்று இரவு பானு கூடாரத்திற்கு வந்து படுத்துக் கொண்டு மனக் கோட்டைகள் கட்டிய வண்ணமாயிருந்தான்.

ராணுவத்திலிருப்பவர்கள் விவாகம் செய்து கொள்வதற்கு மேலதிகாரிகளின் அநுமதி தேவை. பானுவுக்கு இந்த அநுமதி பங்களூரில் இருக்கும் அவர்களது தலைமைக் காரியாலயத்தில் இருந்து கிடைக்க வேண்டும். சாதாரணமாக இந்த அநுமதி யாருக்கும் மறுக்கப்படுவது இல்லை. ஆனால் அநுமதி கிடைக்கக் கொஞ்சம் காலதாமதமாகும், — கடிதப் போக்கு வரத்தில்.

"நாளைக்கே விவாகத்திற்கு அநுமதி கோரி ஒரு விண்ணப்பம் கொடுக்க வேண்டும். எப்படியும் ஒரு மாதத்திற்குள் அநுமதி கிடைத்து விடும். பின்பு அவள் தந்தையுடன் கலந்து பேசி ஒரு நல்ல நாளில் சுப காரியத்தை நிறைவேற்றி விடலாம்" என்று தீர்மானித்தான்.

தலைமை அதிகாரிகளின் அநுமதி கிடைத்து விடும். ஆனால் அவனது பெற்றோர்களின் அநுமதி கிடைக்க வேண்டுமே!

இதைப் பற்றிப் பானு வெகு நேரம் யோசித்தான். கடைசியில் "முதலில் அவர்களிடம் விஷயத்தைக் கூறி அவர்கள் அநுமதியோ அபிப்பிராயமோ கேட்டால் தகராறுதான். அவர்கள் எப்படியும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். முதலில் அவளை விவாகம் செய்து கொண்டு, வீட்டிற்கு அழைத்துப் போய்ப் பெற்றோர்களிடம் எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லலாம்; ஸக்கரேதாங்பியின் கள்ளங் கபடற்ற புன் சிரிப்பே அவர்களை வழிக்குக் கொண்டு வந்து விடும்" என்று முடிவுக்கு வந்தான்.

மறுநாள் காலையில் கல்யாணத்திற்கு அநுமதி கோரி ஒரு விண்ணப்பத்தையும் அனுப்பினான்.

ஹிமாலய மலையின் பனிப்பாறைக
உருகி, வழிப் பனியாறாக மட்டற்ற வேக
துடன் பாய்ந்தோடும் போது, அந்
பனிப்பாறையிலுள்ள ஒரு பனித்து
"இல்லை, எனக்கு உங்களுடன் வர இஷ்
மில்லை. நான் இங்கேயேதான் இரு
பேன்" என்று கூற முடியுமா? கூறினு
தான் பயனுண்டா?

அவன் விண்ணப்பம் கொடுத்த ஒ
வாரத்திற்கெல்லாம் பானுவின் நிலை
மேலே சொன்ன பனித் துளியின் நிலை
யைப் போல்தான் இருந்தது.

அவனுடைய "டிவிஷ"னைச் சேர்
அத்தனை பேருக்கும் இரண்டு மாத
கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், அவர்
அதற்கடுத்த இரண்டாம் நாளே புறப்
வேண்டும் என்றும், லீவு கழிந்ததும்
லோரும் திரும்ப லாடாகில் வந்து
வேண்டும் என்றும் அன்றுதான்
டில்லியிலிருந்து உத்தரவு வந்திருந்தது.

கிட்டத்தட்ட இருபதினாயிரம் பெ
களைப் பாதிக்கும் உத்தரவு அது. அ
கேட்ட பத்தொன்பதாயிரத்துத் தொள்
யிரத்துத் தொண்ணூற்றென்பது நபர்
ஆனந்தக் கூத்தாடினார்கள்.

ஆனால் ஒரே ஒரு மனிதனின் நெ
மட்டும் அன்று விண்டுவிடும்போல்
விட்டது.

"வண்ண மயிலேறும் பெருமான்
சனை ஏனோ செய்தான்" என்று அ
நெஞ்சு குமுறிற்று.

* * *

அன்று மாலை பானு சோர்வும் அ
முமே உருக்கொண்டவனாய் ஸக்கரேதா
வின் வீடு வந்து சேர்ந்தான்.

எப்பொழுதும்போல் சிரித்த முகத்து
அவனை வரவேற்ற அவள் அவனது மு
த்தைக் கண்டு பயந்து போய் விட்ட

"ஏன், உனக்கு என்ன நேர்ந்து
டது? ஏன் இப்படி வருத்தத்துடன்
கிறாய்? ஒரே நிமிஷத்தில் உனது சோ
அகற்றி விடுகிறேன்" என்று ப
கொண்டே உள்ளே போய் டீயும் சிற்று
யும் கொண்டு வந்தாள்.

அவள் தந்தையும் அவனை உற்
படுத்தும் பொருட்டு என்னென்ன
சொல்லிப் பார்த்தார்.

பானு சிறிது நேரம் ஒன்றும் பேச வி
பின்பு மெதுவாக எல்லாவற்றை
விஸ்தரித்துக் கூறினான்.

லக்காதோங்பிக்குத் தன் காதுகளையே ம்ப முடியவில்லை.

“இப்படியும் ராதாகிருஷ்ணன் நம்மை மாற்றுவாரா!” என்று வாய் விட்டுக் தறினான்.

ராதாகிருஷ்ணன் தான் மணிபுரி ஊர்த்துக் ளின் குல தெய்வம்.

கடைசியில் பானு சொன்னான்:—

“லீவு முடிந்ததும் வாடரிலிருந்து என் ளைக் கட்டாயம் திரும்ப இங்கேதான் னுப்புவார்கள் என்று எனக்குத் தோன்று றது. காட்டுப் பிரதேசங்களில் போர் ரிய எங்களுக்கு விசேஷப் பயிற்சி தரப் ட்டிருக்கிறது. ஆகவே இந்த முனையில் ான் எங்களது பயிற்சி மிகவும் உபயோகப் டும். லீவு முடிந்ததும் கட்டாயம் நான் ங்கே வந்து உங்களை மறுபடியும் சந் ப்பேன்.”

லக்காதோங்பிக்குக் கொஞ்சம் மன றுதி உண்டாயிற்று.

“இந்தத் தற்காலிகப் பிரிவு இரண்டு ாதத்திற்குத்தானே? அதற்குப் பிறகு றுபடியும் பானு வந்து சேருவான். மறுபடி ம் நாம் முன்மாதிரி சந்தோஷமா ருக்கலாம்!”

* * *

மறு நாள் பகல் இரண்டு மணிக்கு டை பெற்றுக் கொண்டு போகும் பாருட்டு பானு அவ்வீட்டிற்கு வந்தான்.

திண்ணையில் பொற்கொடியும் அவள் கப்பனும் அவனுடன் அவனை எதிர் ர்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களரு ல் அந்த மங்கள கூடையும் இருந்தது. தில் புஷ்பங்களும் பழங்களும் இருந்தன.

மூவரும் உட்கார்ந்து சாப்பிட்ட பின்பு, காஞ்ச நேரம் ஒருவருக்கொருவர் தைரிய ட்டும் வார்த்தைகளைப் பரிமாறிக் காண்டார்கள்.

பானு புறப்படுவதற்காக எழுந்தான். ரியவரை நமஸ்கரித்து விட்டு லக்கா தாங்பியின் பக்கம் நோக்கினான்.

அவள் கண்கள் கலங்கின. அடுத்த ஷணம் கண்ணீர் தாரை தாரை யப் பெருகிற்று. பானுவுக்கும் துக் கத்தை அடக்கமுடியவில்லை.

அவன் மங்கள கூடையை டுத்துக் கொண்டு அவளரு வந்தான். அவன்





எஞ்சினியர் :—ஸார்! நீங்கள் வேணுமானல் பாருங்கோ! அந்தக் கட்டடம் குறைந்தது நூறு வருஷ காலம் ரிப்பேர் செய்யாமலேயே இருக்கிறதா இல்லையா என்று? தொண்ணூற்று ஒன்பதாவது வருஷத்தில் அதில் ஏதாவது ரிப்பேர் ஏற்பட்டது என்றாலும் என்னைக் கேளுங்கோ?

நெற்றியில் ஸிந்தூரப் பொட்டிட்டு, பழங்களையும், புஷ்பங்களையும் அவன் கையில் வைத்தாள்.

இருவரது கண்களும் சந்தித்தன.

“பூலோ ந ஆமாய்” (என்னை மறந்து விடாதே!) என்று மெதுவாக வங்காளியில் கூறினாள் பொற்கொடி.

பாலுவின் கண்களிலிருந்து இரண்டு பெரிய கண்ணீர்த் துளிகள் அவளது பாதத்தை நனைத்தன.

• • •

அன்று மாலை வெள்ளெழுத்து மறையும் நேரத்தில் மோட்டார் லாரிகளில் அந்த ‘டிவிஷ’னைச் சேர்ந்தவர்கள் திமாபூரை நோக்கிக் கிளம்பினார்கள்.

மணிப்பூர் சமஸ்தானத்திற்கு மிகச் சமீபத்திலிருக்கும் ரயில்வே ஸ்டேஷன் திமாபூர். பலேலிலிருந்து நூற்றிருபது மைல் தூரத்தில் இருக்கிறது.

பாலுவுக்கு எல்லாம் ஒரு கனவுபோல் தோன்றிற்று.

திமாபூரிலிருந்து பாண்டு வரை ரயில் பயணம். பாண்டுவிலிருந்து கொஞ்ச தூரம் ‘ஸ்டீமர்’ பிரயாணம். பின்பு மறுபடியும் ரயிலில். பார்வதிபூர் ஸ்டேஷனில் ரயில் மாற்றம். பின்பு கல்கத்தா. அங்கே நாள் தாமதம். மறுநாள் ஹௌராவிலிருந்து கிளம்பி அதற்கடுத்த இரண்டாம் நாள் பாலு சென்னை வந்து சேர்ந்தான்.

பர்மாவிலிருந்து பின்வாங்கி வந்து கொண்டிருந்த துன்பகரமான இரவுகளில் ஆறுதலளித்து வந்த அவனது இன்ப கனவு இப்பொழுது நனவாயிருக்கிறது. ஆம், மறுபடி அவன் தமிழ் நாட்டிற்கு வந்து விட்டான்! கிடைக்கப் போகும் லீவில் என்னென்னவோ செய்ய வேண்டுமென்று அப்பொழுது பாலு திட்டம் போட்டிருந்தான். அவையெல்லாவற்றையும் நிறைவேற்ற அவனுக்கு இப்பொழுது சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது.

ஆனால் பாலு அந்தத் திட்டங்களை இப்பொழுது மறந்துகூடப் போய்விட்டான். அவன் மனம் ஸர்கா தோங்பியையே பற்றி நின்றது.

பாலுவின் தாயார் அருமைப் புதல்வன் யமன் வாயிலிருந்து தப்பி வந்திருக்கிறானென்ற பெருமிதத்தில் விதம் விதமாகச் சமையல் செய்து போட்டாள். பக்ஷணங்கள் செய்து கொடுத்தாள்.

அம்மாவுக்கு அதிருப்தி உண்டாகக்கூடாது என்பதற்காக அவற்றைச் சாப்பிட்டானே தவிர சாப்பாட்டின் ருசியே அவனுக்குத் தெரியவில்லை.

விடுமுறையில் ஸர்கா தோங்பிக்குக் கடிதமெழுதலாமா என்று பல தடவை நினைத்தான். ஆனால் எந்த விலாசத்திற்கு எழுதுவது?

“ஸ்ரீமதி ஸர்கா தோங்பி, பலேல்” என்று எழுதினால் கடிதம் போய்ச் சேருமா?

ஸர்கா தோங்பி இருந்த ராம ராஜ்யத்தில் வீட்டு நெம்பரும், தெருப் பெயரும் கிடையாது. ஆகவே கடிதப் போக்குவரத்து செய்வதும் முடியாத காரியம்.

இரண்டு மாத லீவும் ஒரு விதமாகக் கழிந்தது. பாலு குறித்த தேதியில் வாகூரில் தனது ‘யூனிட்’டில் வந்து மறுபடி சேர்ந்தான்.

வாகூரிலிருந்து புறப்படும் உத்தரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். இந்த மாதிரி சமயங்களில் பல அசந்தர்ப்பங்களினால் லீவிலிருந்து காலதாமதம் செய்து சில நாட்கள் கழித்தே திரும்பும் நபர்களிருப்பதை மேல் அதிகாரிகள் அறிவார்கள் என்பதையும் அவர்கள் திரும்பி வரவும் நேரம் கொடுத்து

...ஞ்சநாள் கழிந்த பிற்பாடே புறப்படும்
...தரவு பிறப்பிக்கப்படும் என்பதையும்
...ன் அறிவான்.

...ஆனால் ஆத்திரத்தி லிருக்கும் மனிதனுக்
...காரண காரியங்களை யோசிக்க நேர
...ண்டா?

...இங்கே பாலு இருந்த அதே நிலைமையில்
...ன் பலேலில் அவளும் இருந்தாள்.
...பது நாள் லீவு கழிந்ததும் அறுபத்தோ
... நாள் பாலு தன் வீட்டில் வந்து
...ப்பானென்று கனவு கண்டு கொண்
...ந்தாள் அந்தப் பேதைப் பெண்.

...ஆனால் அறுபது நாளும் கழிந்து மேலும்
...துப் பதினைந்து தினங்களுமாகி விடவே
...ன் மனம் சஞ்சலப்படலாயிற்று.

...தினமும் தந்தையை அவன் 'யூனிட்'
...ந்த பக்கம் போய்ப் பார்க்கச் சொல்லு
...ள். அவரும் பொறுமையுடன் தின
... போய் வந்து "இல்லை"ப் பாட்டைப்
...வார். "இன்னும் நாலைந்து நாட்களில்
...ு விடுவார்களாம்" என்று அவளைச்
...தாஷப்படுத்தும் பொருட்டுப் பொய்
...ச் சொல்லுவார்!

* * *

...ாலை கோபால் லாகூருக்குத் திரும்பி
... சுமார் முப்பது நாள் கழிந்த பிறகு
... உத்தரவு வந்தது.

...எல்லோரும் மறு நாள் மாலை லாகூரி
...ந்து புறப்பட்டுக் கராச்சி செல்ல
...ண்டும்; அங்கிருந்து கப்பலேறி லண்டன
... இறங்க வேண்டும்; மறு உத்தரவு
...டனில் கிடைக்கும்."

...ந்த உத்தரவைக் கேட்டதும் பேரிடி
...ந்தவன் போலானான் பாலு.

...தை அவன் சிறிதும் எதிர்
...க்க வில்லை. இந்த ஏழ்
...ந்த லண்டனில் பாலைவனப்
...தசத்தில் போர் புரிய ஆறு
...ம் காட்டுப் போரில் விசே
... பயிற்சி அளித்திருக்க
...டிய அவசிய மில்லையே!

...னால் தர்க்கம் செய்வதற்
... விவாதிப்பதற்கும் அவன்
...

...ாித்துவி பணியாற்றுடன்
...தோட மறுக்க முடியாது;
...த்தான் ஆகவேண்டும்.

..., அவன் போய்த்தான்
...வேண்டும். அது தான்
கடமை; அதில்தான் அவனுக்கு நன்மை
யும், கீர்த்தியும்.

* * *

கராச்சியில் அவர்கள் மூன்றே நாட்கள்
தான் தங்கினார்கள்.

நான்காம் நாள் மாலை ஐந்து மணிக்குக்
கப்பலேறுவதற்காகத் துறைமுகத்தில்
அவர்கள் வரிசையாகச் சென்று கொண்
டிருந்தார்கள். பாலுவும் அந்த வரிசையி
லிருந்தான்.

"கோபால், இதோ உனது கலியாணத்
திற்கு அனுமதி பங்களூரிலிருந்து இப்
பொழுது தான் கிடைத்தது" என்று
அவன் கப்பலில் ஏறியதும் அவசரமாக
ஒரு கடிதத்தை அவனிடம் நீட்டினார் அவ
னது 'கமாண்டிங் ஆபீஸர்'.

ஆம்; அவனது கலியாணத்திற்கு அனு
மதி கிடைத்து விட்டது!

பாலு ஒரு நிமிஷம் அந்தக் கடிதத்தையே
உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.


மறு நிமிஷம் 'பல பல' வென்று அவன்
கண்களிலிருந்து பெருகிய கண்ணீர் அலைத்
திரைக் கடலுடன் கலந்தது.

அதே நேரத்தில் லீலா தோப்பூர்
அணைருகில் நின்றுகொண்டு பாலு வரும்
வழியைப் பார்த்த வண்ண மிருந்தாள்.


கைவோரத்தில் சங்கன் கடை இருந்
தது. அதில் புஷ்பங்களும், பழங்களும்,
குங்குமமும் இருந்தன.

அவளது கண்கள் வழியையும் சங்கன்
கடையையும் மாறி மாறிப் பார்த்துக்
கொண்டிருந்தன.


கருணையுள்ள திருடன்!




நாளைக்குக் கடைக்காரச் செட்டியார் 'இன்கம் டாக்ஸ்' கணக்குக் கொடுக்கத் திண்டாடப் போகிறார் என்று கருணை கொண்ட திருடன் போகும் போது கணக்கு எழுதி வைத்து விட்டுப் போகிறான்!



உலகத்திலேயே மிகக் கீர்த்தி வாய்ந்த டயர் டிரேட் மா



டன்லப் ரப்பர் கம்பெனி (இந்தியா) லிமிட்டெ



சர்க்கஸ் கிட்டு

ரஸாக்

கிட்டு ரொம்பவும் சுறுசுறுப்பான பையன். எப்பொழுதுமே அவனுக்கு விளையாடுவதில்தான் ஆசை. அவன் ஊரில் அவனுக்கு விஷமக்காரக் கிட்டு என்று பெயர். கிட்டுவின் வீட்டிற்கு அடுத்த வீட்டில் ஒரு பணக்காரர் இருந்தார்.


கிட்டு சதா துருதுருவென்று ஏதாவது செய்து கொண்டேயிருப்பான். பையன்களோடு சேர்ந்துகொண்டு 'ஓ' வென்று கத்தி விளையாடுவான். இதெல்லாம் அந்தப் பணக்காரருக்குப் பிடிக்காது. அவர் எத்தனையோ தடவை கிட்டுவை அழைத்துக் கண்டித்திருக்கிறார்.

ஒரு நாள் உள்ளூரில் நடந்துகொண்டிருந்த சர்க்கஸைப் பார்ப்பதற்காகக் கிட்டுவும் அவனுடைய சிநேகிதர்களும் போயிருந்தார்கள்.

சர்க்கஸ் பார்த்துக் கொண்டிருந்த கிட்டுவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. தன்னையே மறந்திருந்தான். சர்க்கஸில் ஒரு 'பார்' விளையாட்டுக்காரன் நன்றாக 'பார்' விளையாடினான். இன்னும் நல்ல நல்ல வேலையெல்லாம் செய்து காட்டினான். அவன் வரும் பொழுதெல்லாம் கிட்டுவுக்குக் குஷி பிறந்து விடும். எழுந்து ஆட ஆரம்பித்து விடுவான்.

சர்க்கஸ் விட்ட பிறகு கிட்டுவுக்கு அதே ஞாபகம். தன் வீட்டில் போய்த் தானும் ஒரு 'பார்' கட்டி விளையாட வேண்டும் என்று தீர்மானம் செய்து விட்டான். மறு நாள் சாயந்திரம் கொஞ்சம் இருட்டியதும் தன்னுடைய சிநேகிதர்களை அழைத்து வந்தான். அப்பொழுது கிட்டுவின் அப்பாவும் அம்மாவும் வீட்டில் இல்லை. கிட்டு எல்லோரையும் அழைத்துப் போய் அவன் வீட்டில் இருந்த ஓர் ஏணியை எடுத்து வந்து நேராகப் பிடித்துக் கொள்ளச் சொன்னான். சிநேகிதர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. இருந்தாலும் அவர்கள் பிடித்துக் கொண்டார்கள். கிட்டு மேலே ஏறி ஏற்கெனவே கட்டி வைத்திருந்த 'பாரை'ப் பிடித்துக் கொண்டு சர்க்கஸ்காரன் மாதிரி ஆடினான். சிநேகிதர்களெல்லோரும் அதைப் பார்த்து ஆச்சரியமடைந்து சந்தோஷப் பட்டார்கள். கிட்டு மேலும் மேலும் வேகமாக ஆடினான். நன்றாக ஆடிக் கொண்டிருந்த சமயத்தில் 'பார்' கட்டியிருந்த கயிறு அறுந்து விட்டது. சிநேகிதர்களெல்லாம் பயந்துபோய் 'ஓ' வென்று கத்தினார்கள்.

கயிறு அறுந்த வேகத்தில், எதிரே இருந்த ஒரு கம்பி இல்லாத ஜன்னல் வழியாக, அடுத்த வீட்டிற்குள் போய் விழுந்தான் கிட்டு.






ஸ்நேகிதர்களெல்லோரும் கிட்டுவுக்கு நன்றாய் அடிபட்டிருக்குமென நினைத்தார்கள். கிட்டுவும் அடுத்த வீட்டில் விழும்பொழுது கண்களைக் கெட்டியாக மூடிக் கொண்டான். சரியான அடிவிழப் போகிறது என்று நினைத்துக் கொண்டான். டமார் என்று சத்தம் கேட்டது. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் கிட்டு கண்ணைத் திறந்து பார்த்தான். அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. இவன் கீழே விழுந்து கொண்டிருந்த சமயத்தில் அடுத்த வீட்டுப் பிரபுவை ஒரு திருடன் கைத் துப்பாக்கியைக் காண்பித்து பயமுறுத்தி, பணப் பெட்டியின் சாவியைக் கேட்டுக் கொண்டிருந்தான். கிட்டு வந்த வேகத்தில் தெய்வாதீனமாகத் திருடன்மேல் வந்து விழுந்தான். அறுந்த 'பார்' கம்பியின் அடி விழுந்த வேகத்தில் திருடன் பயந்து போய் ஓடிவிட்டான். எதிர்பாராமல் இப்படி நேர்ந்ததைப் பார்த்துப் பணக்காரர் பிரமித்துப் போய்ச் சந்தோஷப் பட்டார். உடனே கிட்டுவைப் பார்த்து, "தம்பி, உன்னை நான் தெரியாமல் விஷமக்காரன் என்று சொல்லி விட்டேன்! உண்மையில் நீதான் நல்ல பையன். புத்திசாலிப் பையன். சரியான சமயம் பார்த்து அவ்வளவு உயரத்திலிருந்து பயப்படாமல் குதித்து அவனை அடித்து விரட்டி விட்டாய்!" என்று சொல்லி அவனை அணைத்துக் கொண்டார்.

மறு நாள் பணக்காரர் வீட்டில் கிட்டுவுக்கும் அவன் சகாக்களுக்கும் ஒரு பலமான விருந்து நடந்தது. அன்று முதல் கிட்டுவுக்குக் 'கெட்டிக்காரக் கிட்டு' என்று பெயர் மாறி விட்டது!





தலை நிறைந்த கூந்தலே முகத்தின் அழகை எடுத்துக் காட்டுவது. கூந்தலே முக அழகை ஆக்குவதும், அழிப்பதும். கூந்தலழகையும் முக அழகையும் இன்றே கேசவர்த்தினியைக் கொண்டு விருத்தி செய்யுங்கள்.

அற்ப கேசத்தைவிட அழகுக்கு ஹானி வேறில்லை. இதைப் பரிஹரிக்கக் கேசவர்த்தினியைவிடச் சிறந்த மருந்துமில்லை. இழந்த கூந்தலையும் இளமையையும் கேசவர்த்தினியைக் கொண்டு இன்றே பெறுங்கள்.

அழகுள்ளவர் ஒரு சிலரே. ஆனால் கூந்தலழகையோ கேசவர்த்தினி உபயோகத்தால் ஒவ்வொருவரும் பெறலாம். கேச சம்பத்து படைத்தவர் அதை இழக்காமல் கேசவர்த்தினி கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியால் அதை அடையுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது.

விலை அணா 12.

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயனசாலை,

ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்

வெஜிடபில் கதம்ப ஊறுகாய்



வெள்ளரிக்காய், இஞ்சி, பாவக்காய், கிரைத்தண்டு, வாழைத் தண்டு, கத்தரிக்காய், பச்சை மிளகாய், பச்சை மிளகு — சொல்லும்போதே வாயில் ஜலம் ஊறுகிறது — முதலியவை சேர்த்து கைபடாமல் ஜிஞ்ஜாமிருதமாகத் தயாரிக்கப்பட்டது. வாய்க்கு வெகு ஜோர். உடம்பிற்கு பரம சுகம். இன்றே உங்கள் தேவைக்கு எழுதவும். இரு சைஸ்களில் கிடைக்கும்.

•

தயாரிப்பவர்கள்:

டி. எஸ். ஆர். & கோ.

வாஸனா திரவிய வியாபாரிகள்

கும்பகோணம்

மதராஸ் ஸ்டாக் ஏஜெண்டுகள்:

மெஸர்ஸ். புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி

ஸ்டாக்கிஸ்டு:

B. பாலபட்டாபி,

வைசியாள் தெரு, கோயமுத்தூர்.

சிரஞ்சீவிக் காதல்

விந்தன்

அன்றொரு நாள் எங்கள் ஊர் தாமரைக் குளக்கரையில் உட்கார்ந்திருந்தேன். இயற்கையின் எழிலில் இதயத்தைப் பறி கொடுத்திருந்த எனக்குப் பின்னால் யாரோ 'கலுக்' கென்று சிரிக்கும் சத்தம் கேட்டது. சுற்று முற்றும் பார்த்தேன்; யாரையும் காணவில்லை.

"என்ன, விழிக்கிறீர்? என்னைத் தெரியவில்லையா?" — இப்படி ஒரு கேள்வி! — குரலில் மட்டும் பெண்மையின் மென்மையிருந்தது — யாரா யிருக்கும்?

"தெரியவில்லையே!" என்றேன்.

"என்ன! என்னைத் தெரியாதவர்கள் கூட இந்த உலகத்தில் உண்டா?"

"உன்னைத் தெரியாதவர்கள் இந்த உலகத்தில் உண்டோ, இல்லையோ! எனக்கு மட்டும் உன்னை நிச்சயமாகத் தெரியாது!"

"வேடிக்கைதான்! என் பெயரைச் சொன்னாலாவது தெரியுமோ?"

"'தெரியும்' என்று இட்டமாய்ச் சொல்ல முடியாது; சொல்லேன் பார்ப்போம், தெரிகிறதா என்று!"

"என் பெயர் கமலி! இப்பொழுதாவது தெரிகிறதா?"

"கமலியா! உலகத்தில் எத்தனையோ கமலிகள்! நீ ஒருத்திதானா?........"

"இருக்கலாம்; ஆனால், அந்தப் பெயர் கொண்டவர்கள் அனைவருமே அதற்கு அருகதை யுள்ளவர்களா யிருக்க முடியுமா? நீதான் சொல்லேன்! — நான்தான் அழகி கமலி! அந்தப் பெயருக்கு முற்றிலும் அருகதை யுள்ளவளும் நான்தான்! என்னைப் போல் அழகி இந்த ஈரேழு பதினாலு உலகங்களிலும் கிடையாது. நான் கனவிலும் காணமுடியாத அழகி. இத்தனைக்கும் நான் தலையைச் சீவி சிணுக்குவதில்லை; மாலை இளம் காற்றில் மணம் கமழும் மலர்களைச் சூடி மகிழ்வதுமில்லை; செந்தூரப் பொட்டிட்டு சிந்தை குளிர்வதுமில்லை; சித்திர விசித்திர வேலைப்பாடமைந்த செம்பொன் ஆபரணங்கள் பூணு- வதுமில்லை; பகட்டான பட்டாடை கட்டி- மினுக்குவதுமில்லை! — ஆனாலும் நான்தான் இந்த உலகத்திலேயே ஒப்பற்ற அழகி!"



★

இதென்ன வேடிக்கை! இவள் என்- தன் அழகைப் பற்றி என்னிடம் இப்படி- யெல்லாம் வர்ணிக்கிறாள்? அசரீரியா யிருக்- கும் இவள். அழகியா யிருந்தால் என்ன- அழகியா யில்லாவிட்டால்தான் என்ன?

"உன் அழகுக்கு ஆயிரம் கோடி வண- க்கம், அம்மா! எனக்குக் கல்யாணமாகி- விட்டது. நான் போய் வருகிறேன்!" என்று எழுந்தேன்.

கலகல வென்று நகைக்கும் சத்தம் கேட்- டது. அந்த நகைப்பில்தான் என்ன- குறும்பு! — நான் பொறுமையை- இழந்து விட்டேன். "உன்- சிரிப்பில் நான் சொக்கிவிட- மாட்டேன்!" என்றேன்.

மேலும் அவள் சிரித்துக்- கொண்டே சொன்னாள்:

"நீயா சொக்க மாட்டாய்? உனக்கு என்னைத் தெரிய- வில்லை; தெரிந்தால் கட்டா- யம் சொக்கி விடுவாய்! என்ன! இதுவரை என் அழ- கில் சொக்கிய கவிஞர்கள் எத்தனையோ பேர்- கதாசிரியர்கள் எத்தனையோ பேர்! என்- உன்னையும் என்னையும் இந்த உலகத்தில் படைத்த அந்தக் கடவுளே என் அழகில் சொக்கி யிருக்கிறார்! ஆனாலும் என் உள்ளம் ஒரே ஒருவரைத்தான் கொள்ளை கொண்- டிருக்கிறது. எத்தனை ஜன்மம் எடுத்தாலும், எத்தனை யுகங்கள் கழிந்தாலும் நான் அவரைத் தவிர வேறு யாரையும் விரும்புவ- தில்லை. அவரைக் கண்டால் கண்ணைத் திறப்பேன்; காணாவிட்டால் கண்ணை மூடிக் கொள்வேன். இந்த உலகம் தோன்றிய நாளிலிருந்துதான் நாங்கள் ஒருவரை ஒருவர் காதலிக்கிறோம். ஆனாலும் இதுவரை நான் அவரிடம் ஒரு வார்த்தை பேசியது கிடை- யாது! ஒருவரை ஒருவர் தீண்டியதும்

கிடையாது! ஆனால் எங்கள் கண்கள் பேசிக் கொள்வதுண்டு; அந்தக் காதல் பேச்சிலே நாங்கள் கருத்தை இழப்பதுமுண்டு!"

"அப்படிப்பட்ட அதிசயக் காதலன் யாரோ?"

"இன்று மண்ணுலகில் வாழ்ந்து நாளை மண்ணோடு மண்ணாய் மடியப் போகும் மனிதனல்ல: கண்ணுக்குத் தெரியாமல் இருந்து கொண்டு, கதை காவியங்களிலே மட்டும் காட்சி தந்துகொண்டு, கள்ளர்களோடு நல்லவர்களையும், எளியவனோடு வலியவனையும், இல்லாதவனோடு இருப்பவனையும் — இன்னும் இதுபோன்ற எண்ணற்ற ஏற்றக் குறைகளோடு இந்த உலகத்தைப் படைத்து விட்டு, 'எல்லாவற்றுக்கும் காரணம் நான்தான்!' என்று வெட்கமில்லாமல் சொல்லிக் கொள்ளும் இறைவனுமல்ல; இந்த உலகம் என்று தோன்றியதோ, அன்றே அவனும் தோன்றினான்; அவன் என்று அழிவானோ, அன்றே இந்த உலகமும் அழிந்துவிடும்! வண்டியின்றி, வாகனமின்றி அவன் ஒரே நாளில் இந்த அகண்டாகார உலகம் முழுவதையும் சுற்றி வந்து விடுவான்! ஏழை, பணக்காரன் என்ற எண்ணமின்றி, மேல் ஜாதி, கீழ் ஜாதி என்ற பேதமின்றி, தாவர வர்க்கம், பிராணி வர்க்கம் என்ற வித்தியாசமின்றி எல்லோருக்கும் உயிர், உணவு, ஒளி எல்லாம் கொடுப்பது அவன் வேலை! இப்பேர்ப்பட்ட வேலைக்கு அவன் யாரிடமும் ஒரு காசு கூலி வாங்குவது கிடையாது! — இன்னொரு அதிசயத்தைத் தான் கேளேன்: இத்தனை வேலைத் தொந்தரவிலும் அவன் என்னுடன் 'கண்ணாமூச்சி' விளையாட மட்டும் மறப்பதே யில்லை!"

"அவன் பெயரோ?"

"ஆயிரம் நாமங்கள் உண்டு!"

"அதிசயத் தம்பதிகளாயிருக்கிறீர்களே!"

"ஆமாம்; நாங்கள் அதிசயத் தம்பதிகள் தான்! எங்கள் காதலும் அதிசயக் காதலே! 'ஒரே முறை கூடினால் போதும்' என்று விளக்கொளியின் வெந்தழலிலே விழுந்து வீணாய் மடியும் விட்டில் பூச்சியின் காதலைப் போன்றதல்ல எங்களுடைய காதல்; தேய்பிறை போல் தேய்ந்து போகும் மனித வர்க்கத்தின் மிருகத்தனமான காதலுக்கும் எங்களுடைய காதலுக்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு; காமாந்தகாரம் எங்களுடைய காதலின் ஜீவநாடி அல்ல; அன்பே எங்களுடைய காதலின் ஜீவநாடி. அதற்கு அழிவே கிடையாது. நாங்கள் அமரர்கள். உங்களைப் போல் அற்ப ஆசையைக் காதலென்று சொல்லிக் கொண்டு நாங்கள் அன்பைக் கொலை செய்வதில்லை; அமர வாழ்வை இழப்பதுமில்லை; எங்கள் காதல் சிரஞ்சீவிக் காதல்!"

★

சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தேன். அகக்கண்ணில் அந்த அதிசயத் தம்பதிகள் தோன்றினர்!


"கமலமே! உன்னை யார் என்று தெரிந்து கொண்டேன்; உன்னுடைய காதலன் யார் என்பதையும் கண்டு கொண்டேன். கலைவாணியின் பீடமல்லவா நீ! கலைஞர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவளல்லவா நீ! நத்தையின் வயிற்றில் உதிக்கும் முத்தைப் போன்று சேற்றில் பிறக்கும் செந்தாமரையல்லவா நீ! வெண்ணிலவின் தண்ணொளியிலே குவிந்து, வெய்யவனின் வெப்பத்திலே விரியும் விந்தை உனது காதலின் சிந்தைதானோ? உன்மீது கொண்ட காதலால்தான் தன்னை நோக்கித் திரும்பித் திரும்பிப் பார்க்கும் சூரிய காந்தியைக்கூட உனது காதலன் லட்சியம் செய்வதில்லை போலும்! — இப்பொழுது தெரிந்து கொண்டேன், உனது காதலன் கமலபதி ஏன் ஒரு நாள்கூட ஓய்வு எடுப்பதில்லையென்று! — உன் கமல வதனத்தைக் காணாமல் அவனால் ஒரு நாளாவது இருக்க முடியுமா? அதனால்தான் விடிந்தும் விடியாததுமாக விழுந்தடித்துக் கொண்டு ஓடி வருகிறான்!" என்று சொல்லி நான் சிரித்தேன். அதே சமயத்தில், அவளுடைய காதலனான ஆதவனும் சிரித்துக் கொண்டே அடிவானத்தில் மறைந்தான்.

கமலி நாணத்தோடு கண்களை மூடிக் கொண்டாள். அப்பொழுதும் அவள் அழகு குறையவில்லை!



"என்ன கொஞ்ச நாட்களாகத் தோட்டத்துப் பக்கமே காணோம்?"

"தோட்டம் வரையிலும் பறந்து போய்த் தேன் எடுத்து வரச் சோம்பலாக இருக்கிறது. அதற்காக இங்கே இருக்கும் புட்டியிலிருந்தே எடுத்துப் போகிறேன்."



கம்பர் தரும் காட்சி

130. கூவி அழைக்கிறாள்!

○ ● ○

சீதையைத் தூக்கிக் கொண்டு போவதற்காகச் சூர்ப்பனகை பாய்ந்தாள். அப்படிப் பாய்ந்ததை லக்ஷ்மணன் கண்டு கொண்டான். "அடியே, நில் அங்கே!" என்று சொல்லிக் கொண்டு ஒரே கோபாவேசத்தோடு ஓடினான். அவளைக் கொன்றே இருப்பான். ஆனால் பெண்ணல்லவா இவள் என்ற ஞாபகம் வந்தது. அப்படியே கையிலிருந்த வில்லைக் கீழே போட்டு விட்டு அவளது கூந்தலை எட்டிப் பிடித்துக் கொண்டான்.

'நில்அ டீ!' எனக்
கடுகினன்: பெண்எனா
நினைந் தான்;
வில்எ டா(து)அவன்
வயங்கெரி யாம்என
விரிந் த
சில்லல் ஓதியைச்
செங்கையில் திருகுறப்
பற் றி
வல்வ யிற்றுதைத்(து),
ஒளிகிளர் வாளினை
உரு வ,

[நில் அடீ எனக் கடுகினன்: நில் அங்கே என்று அதட்டிக் கொண்டு வேகமாய் ஓடினான்; அவன் வயங்கு எரியாம் என விரிந்த: கொழுந்துவிட்டுப் படர்ந்த நெருப்பு என்று சொல்லும்படியான அவளது; சில்லல் ஓதியை: சிலிர்த்துள்ள செம்பட்டை ரோமத்தைச் செங்கையில் திருகுறப் பற்றி: கையினால் ஒரு திருக்குத் திருக்கி இறுகப் பிடித்துக் கொண்டு; வல்வயிற்று உதைத்து: வலிய வயிற்றில் ஒரு உதை கொடுத்து: ஒளிகிளர் வாளினை உருவ: ஒளி வீசும்படியான வாளை அரையில் கட்டியிருந்த உறையிலிருந்து உருவினானோ இல்லையோ.]

பயமுறுத்துவதற்காகத்தான் வாளை உருவினான். ஆனால் அரக்கி என்ன செய்தாள்; லக்ஷ்மணனை ஒரே வேகமாய்த் தாக்கி விட்டு, ஆகாயத்தில் குதித்துவிட வேண்டும் என்று ஒரு துள்ளுத் துள்ளினாள். அவ்வளவுதான்; அப்படியே அவன் தலையைப் பிடித்த பிடியோடு நன்றாய்க் குறுக்கி விட்டு, 'அயோக்கியத்தனம் பண்ணாதே' என்று சொல்லி விட்டு லக்ஷ்மணன் என்ன செய்கிறான் பார்ப்போம்.

ஊக்கித் தாக்கி, விண்
படர்வெம்என்(று) உருத்தெழு
வா ளை,
நூக்கி நொய்தினில்,
'வெய்திழை யேல்'என
நுவ லா,
மூக்கும் காதும்வெம்
முரண்முலைக் கண்களும்
முறை யால்
போக்கிப், போக்கிய
சினத்தொடும் புரிகுழல்
விட் டான்.

[ஊக்கித் தாக்கி: எதிர்த்துத் தாக்கி: விண் படர்வெம் என்று: ஆகாயத்தில் துள்ளி விடலாம் என்று; உருத்து எழுவாளை: சினந்து துள்ளிய சூர்ப்பனகையை: நூக்கி நொய்தினில்: லகுவாகத்தானே அப்படியும் இப்படியுமாகக் குறுக்கி; வெய்து இழையேல் என நுவலா; கொடிய காரியத்தை ஒன்றும் செய்யக்கூடாது, தெரிகிறதா, என்று அழுத்தமாய்ச் சொல்லி முடித்து விட்டு; போக்கிய சினத்தொடும் புரிகுழல் விட்டான்: மனசை விட்டுக் கோபம் போய் விட்டது. அதோடு கையை விட்டு அரக்கியின் கூந்தலும் போய் விட்டது, லக்ஷ்மணனுக்கு.]



ஓட்டல் பழைய சிப்பந்தி:— ஸார்! அந்தப் பையன் புதுசு; ஏதோ ஒரு மாதிரியாய் இருக்கிறானே என்று யோசிக்க வேண்டாம்!

சாப்பிட வந்தவர்:— அதைப் பற்றி என்ன கவலை? இன்னும் இரண்டு மாசம் போனால் அவனும் உங்களைப் போலவே ஆகி விடுகிறான்!

கூந்தலை விட்ட மாத்திரத்தில் தொப்பென்று கீழே விழுந்தாள் சூர்ப்பணகை. ஒன்றும் செய்ய ஓடவில்லை. திகைத்துப் போய் அப்படியே உட்கார்ந்து விட்டாள். பிறகு மெள்ளக் கையினால் தரையில் கிடந்த மூக்கின் துண்டத்தை எடுத்து மூக்கோடு மூக்காக ஒட்டப் பார்க்கிறாள். அது ஒட்டவா செய்யும்? கொல்லுலைபோலப் பெருமூச்சு எறிகிறாள். கையினால் தரையை ஓங்கி அடிக்கிறாள்.

ஒற்றும் மூக்கினை;
உலையுறு தீயென
உயிர்க் கும்

எற்றும் கையினை
நிலத்தினில்; இணைத்தடம்
கொங் கை

பற்றும் பார்க்கும்: மெய்
வெயர்க்கும்; தன் பருவலிக்
கா லால்ச்

சுற்றும் ஓடும்; செம்
சோரி நீர் சொரிதாரச்
சோ ரும்

[எற்றும் கையினை நிலத்தினில்: வேகமாய்க் கையை நிலத்தில் அடிப்பாள்; பார்க்கும்: சுற்று அப்படியே பார்த்துக் கொண்டிருப்பாள்; உடம்பெல்லாம் ஒரே வெயர்வையாய் ஓடுகிறது; பரு வலிக் காலால் சுற்றும் ஓடும்: பருத்த திடமான காலால் எழுந்து நின்று கொண்டு அப்படியும் இப்படியுமாக சுற்றுவாள். வேறென்று அங்கும் இங்குமா ஓட ஆரம்பிப்பாள். செம்சோரி நீர் சொரி தாரச் சோரும்: இரத்தம் அதிகமாகச் சிந்த விடச் சோர்ந்து உட்கார்ந்து விடுவாள்.

குறிப்பு: என்று மில்லாத எதிர்பாரா அவமானம் ஒரு பக்கம். புண்பட்ட இடத்தின் வலியும் காந்தலும் ஒரு பக்கம். மனம் தேகம் எல்லாம் ஒரே துடிப்பாய்த் துடிக்கிறது. இந்தத் துடிப்பைச் செய்யுளில் தெள்ள தெளியப் பார்க்கிறோம்.]

காயங்களிலிருந்து, அருவிபோல் ரத்தம் பொழிகிறது. பக்கத்திலுள்ள தரையெல்லாம் ரத்தம் சிந்திச் சேறாக இருக்கிறது. அதில் இப்படியும் அப்படியுமாகச் சுற்றித் திரிகிறாள், வேதனையால் 'கோ' என்றலறி அரக்கத் தலைவர்களின் பெயர்களைச் சொல்லி அரற்றுகிறாள்.

ஊற்று மிக்க நீர்
அருவியின் ஒழுகிய
குரு திச்

சேற்று வெள்ளத்துள்
திரிபவள், — தேவரும்
இரி யக்,

கூற்றம் உட்கும்தன்
குலத்தினோர் பெயரெலாம்
கூ றி

ஆற்று கிற்றிலள்
பற்பல பன்னி நின்(று)
அழைத் தாள்

[ஊற்று மிக்க நீர் அருவியின் ஒழுகிய: மலையூற்று மிகுதியாயுள்ள அருவியைப்போல ஒழுகிய: குருதிச் சேற்று வெள்ளத்துள் திரிபவள்: இரத்தம் கலந்துள்ள சேறு இரத்தோட்டமாய்க் கிடந்த நிலத்தில் திரிபவளாய்: தேவரும் இரிய: தேவர்களே பயப்படும்படி: கூற்றம் உட்கும்: எமனும் பயப்படும்படியான: ஆற்று கிற்றிலள் பற்பல பன்னி நின்று: அவமானத்தைத் தாங்க முடியாதவளாய்ப் பலபல விதமாகச் சொல்லிக் கொண்டு: அழைத்தாள்: கூவி அழைத்தாள்.]

எப்படிக் கூவி அலறுகிறாள் என்பதை அடுத்த இதழில் பார்ப்போம்.



A BRIGHT NEW FIX-UP
KERALA
ROSE
SOAP
For the Delightfully Refreshing Soap
KERALA SOAP INSTITUTE, CALICUT
FAS-193



ஹிந்துஸ்தானி விழா

சாவி

மாம்பலம் பிரக்யாதி யடைந்திருப்பதற்கு ஏற்கெனவே மூன்றுவிதக் காரணங்கள் உண்டு.

1. காந்திஜியின் வாசஸ்தலம் அங்கே அமைந்திருப்பது.

2. ராமகிருஷ்ண வித்யாலயம் நடைபெறுவது.

3. அடியேனுடைய குடியிருப்பு!

இப்போது நாலாவது காரணமான மகாத்மாஜியின் விஜயத்தினால் மாம்பலத்தின் மகிமை பன்மடங்கு பெருகி நாடெங்கும் பரவிவிட்டது. கடந்த பத்துத் தினங்களாகத் தியாகராய நகரின் தோற்றமே அடியோடு மாறிப்போய் விட்டது. மேற்படி நகரின் வீதிகள், சாலைகள் எல்லாம் பாதாள உலகத்தில் அமுங்கிப் போனது போலவும் அதன்மீது புதிய நகரம் ஒன்று நிர்மாணமாகி விட்டதுபோலவும் தோன்றுகிறது.

தியாகராஜ நகரின் தென் கிழக்குப் பிரதேசத்துக்கு 'ஹிந்துஸ்தானி நகரம்' என்று நாமம் சூட்டி யிருக்கிறார்கள்.

தட்சிண பாரத ஹிந்தி பிரசார சபையைச் சுற்றியுள்ள மைதானங்கள், காலி மனைகள் முதலிய எல்லா இடங்களையும் பந்தல் போட்டு மறைத்து விட்டிருக்கிறார்கள்.

மேற்படி ஹிந்தி பிரசார சபைக்கும் அதைச் சேர்ந்த ஹிந்துஸ்தானி நகரத்துக்கும் போகும் முக்கிய வீதிகளின் பிரவேச வாசல்களில் 'பஜாஜ் கேட்' 'கஸ்தூரிபா கேட்' என்று மண்டபங்கள் வேறு அமைத்திருக்கிறார்கள்.

இப்படி யெல்லாம் மாம்பலத்தின் தோற்றத்தையும், பெயரையும் மாற்றி நம்மை யெல்லாம் திகைத்துத் திக்கு முக்காடச் செய்து வருகிறவர்கள் வேறு யாருமில்லை; தட்சிண பாரத ஹிந்துஸ்தானி பிரசார சபையினர்தான்! தங்களுடைய வெள்ளிவிழாக் கொண்டாட்டத்துக்காகவும், மகாத்மாஜியின் சென்னை விஜயத்துக்காகவுமே இம்மாதிரி யெல்லாம் செய்திருக்கின்றனர்.

சாதாரண நாட்களிலேயே மாம்ப
தில் புகுந்து ஒரு குறிப்பிட்ட இடம் போ
சேருவதென்றால் பிரம்மப் பிரயத்தனம
விடும். இப்போதோ சொல்ல வே
டியதே யில்லை! ஆனால், நல்ல வேளைய
இத்தனை சிக்கல்களையும் மீறி மகாத்ம
வின் பிரார்த்தனையில் கலந்து கொ
தற்கு இயற்கையாகவே ஆண்டவன் ஒ
வசதியை அளித்திருக்கிறார்.

வெளியூர் வாசிகளோ, சென்னை வ
களோ, யாரா யிருந்தாலும் ரயிலை வி
இறங்கியதும் பிரார்த்தனை நடக்கும் இ
துக்கு எப்படிப் போவது என்று தி
டாடித் தெருவில் நிற்க வேண்டிய அ
யமே கிடையாது. ரயிலை விட்டு இறங்
தும் அவர்கள் பாட்டுக்குக் கண்கள் இர
டையும் மூடிக்கொண்டு நின்ற இட
லேயே நின்றால் போதும். பின்னால் அ
மோதிக் கொண்டுவரும் ஜன சமுத்
மானது அவர்களை அப்படியே முன்
தள்ளிக்கொண்டு தன்னால் போய்ச் சேர்
விடும். அப்புறம் கண்களைத் திறந்து பா
தார்களானால் மகாத்மாஜி பிரார்த்த
நடத்தும் இடத்தில் அவர்கள் இருப்பை
காணலாம்.

மகாத்மாஜியின் விஜயத்தினால் ம
பலம் சில தினங்களாகத் தேர் தி
விழா பட்ட பாடா யிருந்து கொண்டி
கிறது. காப்பி ஹோட்டல்களில் கொடுக்
படும் காப்பியிலிருந்தே மாம்பலத்தில் கூ
அன்றாடக் கூட்டத்தின் சங்கியை அறிந்
கொண்டு விடலாம்.

காப்பி கறுப்பு வர்ணமா? ச
ஐம்பதினாயிரம் பேர்; கொஞ்சம் ஜ
கலந்த வெண்மை நிறமா? சரி, எழு
பதினாயிரம் பேர்! நீர் நிறைந்த வெ
திரவ பதார்த்தமா? சரி, லட்சம் பே
இப்படியே கணக்கிட்டு விடலாம்.

தினசரி பகல் ஒரு மணிக் கெல்ல
ஜனங்கள், வெங்கடநாராயண ரோ
தணிகாசலம் செட்டி ரோடு, போக் ரோ

தியாகராஜா ரோடு முதலிய சகல ரோடுகளின் வழியாகவும் பிரார்த்தனை ஸ்தலத்தை நோக்கித் திரள் திரளாகவும், கும்பல் கும்பலாகவும் போகும் காட்சியானது ஏதோ ஜன வெள்ளம் பெருகும் நதியானது உடைப்பு எடுத்துச் சாலைகளின் இரு கரையும் புரண்டு ஓடுவதைப் போல் தோன்றுகிறது.

முதல் நாள் பிரார்த்தனைக்குச் சுமார் பதினைந்தாயிரம் பேர்களே வந்திருந்தார்கள். பிரார்த்தனைக்கு வரும் கூட்டம் நாளடைவில் பதினைந்தாயிரத்திலிருந்து லட்சம், இரண்டு லட்சம் என்று கணக்கிலடங்காமல் போய்விடவே, பிரார்த்தனையை போக் ரோடு மைதானத்திலிருந்து விஜயராகவாச்சாரி ரோடுக் கருகிலுள்ள பிரம்மாண்டமான பொட்ட வெளிக்கு மாற்றும்படி ஆகிவிட்டது.

23-ந் புதன்கிழமை சாயந்திரம் பிரார்த்தனைக்குச் சுமார் லட்சம் பேர் கூடியிருந்தார்கள். அவ்வளவு பேர்களும் மூன்று மணியி லிருந்தே மகாத்மாஜியின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்து வருவார் வருவார் என்று வழிபார்த்து உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

ஆச்சு; மணி நாலு ஆகி விட்டது. நேரம் ஆக ஆகக் கூட்டத்தின் ஆரவாரமும் வர வர அதிகமாகிக் கொண்டே போயிற்று. இந்தச் சமயம் பார்த்து ராஜாஜி மேடை மீது ஏறி வந்தார். ஒலி பெருக்கியின் முன்னால் வந்து உட்கார்ந்து, எல்லோரும் நிச்சப்தமாயிருக்க வேண்டும். எழுந்து நிற்கக் கூடாது. கை தட்டக் கூடாது. 'ஜே' கோஷம் போடக் கூடாது. மகாத்மாஜி வந்து விட்டால் உங்களுக்கெல்லாம் உங்களை அறியாமலே பயித்தியம் பிடித்துவிடும். அப்போது அந்த வெறியை அடக்கிக் கட்டுப்பாடாகவும் அமைதியாகவும் ஒழுங்காகவும் இருக்க வேண்டும். எங்கே? இப்போது காந்திஜி வருவதற்கு முன்பாக ஒரு நிமிஷ நேரம் மௌனமாக இருந்து காட்டுங்கள்" என்றார். அவ்வளவுதான்; தெற்குப் பக்கம் உட்பட எல்லா திசைகளிலும் ஒரே நிச்சப்தம் குடிகொண்டது. (தெற்குப் பக்கத்தில்தான் நிருபர்கள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்!) அங்கங்கே சில தொண்டர்கள் ஹரிஜன நிதிக்காக ஜனங்களிடையே நின்று தகர உண்டியைக் குலுக்கின சப்தம் தவிர வேறு மூச்சு பேச்சு கிடையாது. அப்போது ராஜாஜி மறுபடியும், மைக் முன்னால் வந்து "வாலண்டியர்கள் உண்டியைப் பலமாகக் குலுக்க வேண்டாம். அப்படிக் குலுக்கினால் உண்டியின் அடிப்பாகம் திறந்து கொள்ளும்" என்றார். அவ்வளவுதான்! உடனே ஒரு லட்சம் பேர்களும் தங்கள் மௌனத்தைக் கலைத்துக்கொண்டு குபீரென்று சிரிக்கத் தொடங்கிவிட்டார்கள். இதற்குள் மணி ஐந்து ஆகிவிடவே பிரார்த்தனையின்போது செய்ய வேண்டிய பஜனைக்குப் பயிற்சி நடத்தும் பொருட்டு மகாத்மாவின் பேரன் கனு காந்தியும், பஜாஜின் மகன் ராமகிருஷ்ண பஜாஜும் மேடைக்கு வந்து சேர்ந்தார்கள்.

பிரார்த்தனை என்றால், கனு காந்தி பாடுவதைப் பிரார்த்தனைக்கு வந்திருப்பவர்கள் அனைவரும் சேர்ந்து பின்னால் கோஷ்டியாகப் பாடவேண்டியது. பாடிக்கொண்டே கைத்தாளம் போடவேண்டியது. இதற்காக ஸ்ரீ கனு காந்தி மேடைக்கு அரை மணி முன்னதாகவே வந்து எப்படிப் பாட வேண்டும், எவ்வாறு தாளம் போடவேண்டும் என்பதைக் கற்றுக் கொடுக்கிறார். பஜனையின் போது மத்தளம் வாசிக்கிறார்கள். மத்தள வாத்தியத்துடன் சேர்ந்து எல்லோரும் கை தட்டுகிறார்கள். பின்னர் "ராஜாராம் ராம் ராம் சீதாராம் ராம் ராம்" என்று பஜனை ஆரம்பமாகிறது. கனு காந்தி தாளம் போட்டுக் கொண்டே பாட, பின்னேடு சபையிலுள்ள ஆண் பெண் சகலரும் கோஷ்டியாகச் சேர்ந்து பாடுகிறார்கள். சேர்ந்தே தாளம் போடுகிறார்கள். இந்த அதிசயத்தை ஒரு நிமிஷ நேரம் கண்ணை மூடியவாறே கவனித்தேன்.

திடுதிப்பென்று ஏதோ பெருத்த மழை வந்துவிட்டதைப்போல் பிரமை ஏற்பட்டது. ஜனங்களின் கைத்தாளமே அவ்வாறு சரத் கால மாரியைப் போல் சடசட வென்று கேட்டது.

மணி ஐந்தரை. அதோ மகாத்மாஜி வந்துவிட்டார். அவ்வளவு பேர்களும் மகாத்மாஜியின் தெய்வீகத் தோற்றத்தைக் கண்டு மந்திர சக்தியால் கட்டுண்டவர்கள் போல் மெய்ம் மறந்து போய்விட்டார்கள். மகாத்மாஜி, இரண்டு நிமிஷ நேரம் எல்லோருக்கும் நின்றபடியே காட்சியளித்தார். பிறகு, தியானம், பிரார்த்தனை எல்லாம் முடிந்ததும் காந்திஜி ராம நாமத்தின் மகிமையைப் பற்றிச் சவிஸ்தாரமாய் எடுத்துக் கூறினார்.

அநேகமாய் மகாத்மாஜி தினசரி பிரார்த்தனை வேளைகளின் போது ராமநாம மகிமை, பாஷைப் பிரச்னை இவை இரண்டைப் பற்றியுமே அதிகம் பேசினார்.

* * *

25-ந் வெள்ளிக்கிழமை யன்று சரியாக மூன்று மணிக்கு த. பா. ஹி. பி. சபாவின் வெள்ளி விழா ஆரம்பமாயிற்று. மேற்படி வைபவத்துக்காக மாகாணத்தின் பல இடங்களிலிருந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட

ஹிந்தி பிரசாரகர்கள் வந்திருந்தார்கள். ஹிந்தியைப் பரப்புவதற்கு இடைவிடாத சேவை செய்து வரும் முக்கிய பிரசாரகர்களுக்கு மகாத்மாஜி தம் கையாலேயே நீலக் கதர் சால்வைகள் வழங்கினார். பின்னர், சுமார் 45 நிமிஷ நேரம் ஹிந்துஸ்தானியின் அவசியத்தைப் பற்றிப் பேசினார்.

“மனிதனுக்குப் பிராணவாயு எவ்வளவு அத்யாவசியமோ, அதைப்போல இந்திய மக்களுக்கு ஹிந்துஸ்தானி பாஷையும் அவசியமாகும். ஹிந்துஸ்தானி கற்பதை ஒரு தர்மமாகக் கருத வேண்டும். ஹிந்துஸ்தானி மிகவும் சுலபமான பாஷை. புத்திசாலிகளான தென்னிந்தியர்களுக்கு ஹிந்தி கற்பது ஒரு பிரமாதமான காரியமல்ல” என்றார். காந்திஜி இப்படிக் கூறியதும் சபையில் உட்கார்ந்து கொண்டிருந்த நான் என்னை நானே ஒரு தடவை பெருமிதத்துடன் உற்றுப் பார்த்துக் கொண்டேன். மகாத்மாஜி என்னைப் புத்திசாலி என்று கூறியதே அதற்குக் காரணம். நான் ஒரு தென்னிந்தியன் ஆனபடியால் மகாத்மாஜி கூறியது எனக்கும் பொருந்துமல்லவா?

வெள்ளி விழாவுக்கு அடுத்தபடியாக நடந்த வைபவங்களில் முக்கியமாக 26உ யன்று நடந்த பட்டமளிப்பு விழாவைத்தான் குறிப்பிட வேண்டும். அன்றைய விழாவுக்குத் தமிழ்நாடு, கேரளம், ஆந்திர நாடு, கன்னடம் ஆகிய நாலு பாஷைப் பிராந்தியங்களிலிருந்தும் ‘விசாரத்’ பரீக்ஷையில் தேறியவர்களெல்லாம் பட்டம் பெறுவதற்காக வந்திருந்தார்கள். இவர்களில் பாதிக்குமேல் பெண்மணிகளாகவே இருந்தார்கள்.

விழா ஆரம்பமாவதற்கு ஐந்து நிமிஷம் முன்னதாக, காந்திஜி, ராஜாஜி, இன்னும் பட்டமளிப்பு விழாவில் சம்பந்தப்பட்ட அனைவரும் நீலக் கதர்ச் சால்வையை மேலே போர்த்திக் கொண்டு பந்தலுக்குள் பிரவேசித்தார்கள். ராஜாஜி, தக்கர்பாபா, கலா சப்யார், பியாரிலால், ஸ்ரீ சத்ய நாராயணா, கோபால் ரெட்டி முதலியோர் மேடை மீது பிரசன்னமாயிருந்தார்கள்.

ராஜாஜி பட்டங்களை ஒவ்வொன்றாக எடுத்து மகாத்மாஜியின் கையில் கொடுக்க, சத்யநாராயணஜி பரீக்ஷையில் தேறியவர்களின் பெயரைச் சொல்லி அழைக்க, காந்திஜி அவர்களுக்கெல்லாம் பட்டத்தை வழங்கிக் கொண்டு வந்தார்.

இடையே ஒரு பெண்மணி இடுப்பில் கைக்குழந்தையுடன் வந்து மகாத்மாஜியிடமிருந்து பட்டத்தைப் பெற்றுச் சென்ற… அந்தக் காட்சியைக் கண்டதும் எனக்… ராஜாஜி எப்போதோ தம்முடைய பிரச… கத்தில் குறிப்பிட்ட ஒரு விஷயம் ஞாபக… துக்கு வந்தது:

“ஸ்திரீகள் பி. ஏ. பட்டம் பெறுவதை… காட்டிலும் ஒரு குழந்தைக்குத் தாயா… என்ற பட்டம் பெறுவதுதான் முக்கியம்” என்று கூறியிருக்கிறார். ஹிந்தி… ‘விசாரத்’ பட்டம் என்பது ஆங்கிலத்தி… பி. ஏ. பட்டம் பெறுவதற்குச் சமானமாம்.

எனவே, இந்தப் பெண்மணி ராஜாஜிக்… முன்பாக இடுப்பில் கைக்குழந்தையுட… வந்தபோது “நான் தாயார் பட்டமு… பெற்றிருக்கிறேன்; இதோ பி. ஏ. பட்டமு… பெற்றுக் கொள்கிறேன்” என்று ராஜாஜி… குப் பதில் கூறுவதைப் போல் இருந்தது.

காந்திஜி எல்லோருக்கும் பட்ட… கொடுத்து முடித்ததும் ராஜகுமாரி அமிர… கௌரி தமது பட்டமளிப்பு விழாப் பிரச… கத்தைப் படித்து முடித்தார்.

பட்டமளிப்பு விழாவைத் தவிர, மகா… மாஜி மாதர்கள் மகாநாட்டில் பேசினார்; … யர்கள் மகாநாட்டில் பேசினார்; எழுத்தா… கள் மகாநாட்டில் பேசினார்; மாணவர்க… மகாநாட்டில் பேசினார்; தினசரி மா… வேளைப் பிரார்த்தனைகளின் போ… பேசினார். அவர் சென்னையில் தங்கியிரு… போது தமக்கிருந்த இடைவிடாத அலுவ… களுக்கிடையே இன்னும் பல காரியங்களை… யும் கவனித்திருக்கிறார். பார்லிமெண்டு … கோஷ்டிக்குப் போட்டி அளித்திருக்கிற… சென்னை கவர்னரைக் கண்டு 80 நிமி… நேரம் பேசியிருக்கிறார்.

மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரியா… ஆஸ்பத்திரியில் போய்ப் பார்த்துவிட்… வந்திருக்கிறார். பல அரசியல் பிரமு… களுக்கும், பெரிய மனிதர்களுக்குப் பேட்… யளித்திருக்கிறார்.

மகாத்மாஜியின் இத்தனை அலுவல்களு… கும் ஒருவிதமான குந்தகமும் விளைவிக்காம… பார்த்துக் கொண்ட பெருமை தொண்… படையைச் சேர்ந்ததாகும். அதிலும் முக்கி… மாகப் பெண் தொண்டர்கள் எடுத்து… கொண்ட சிரமம் கொஞ்ச நஞ்சமல்ல. இ… அரிய சேவையில் பெரிய மனிதர்கள் வீட்… பெண்மணிகள் பலர் ஈடுபட்டு மஞ்சள் உ… தரித்து விழாவை மங்களகரமாக நி… வேற்றி வைத்ததற்காக அவர்களை எவ்வள… பாராட்டினாலும் மிகையாகாது.



புதுப்பணக்காரர்

பகீரதன்

பட்டப் பகலிலேயே காட்டு மன்னூர் காயில் சாலையில் போக அந்த ஊர் ஜனங்கள் பயப்படுவார்கள். அவ்வளவு யங்கரமான சாலை அது. அந்தச் சாலை யில் மிராசுதார் குபேரலிங்கம் தன்னந் னியே போய்க் கொண்டிருந்தார். அவர் துப் பணக்காரர். சண்டை ஆரம்பித்த றகு பணம் சேர்த்த பெரிய மனிதர். ந்தத் தைரியத்தில்தான் அவர் பல ாரியங்களைச் செய்து கொண்டு வந்தார். பணத்தினால் ஆகாத காரியமும் ண்டா?" என்று அகம்பாவம் கொண்ட ர். அவரைக் கண்டால் அந்த ஊர் னங்கள் எல்லாருமே வெறுப்புடன் ார்ப்பார்கள்.

"நம்மிடம் எவ்வளவு பணம் இருந்தால் ான் என்ன? ஜனங்களின் அருவருப் க்கு ஆளாகி விட்டோமே! ஏதோ கண் ணுக்கு எதிரே பார்த்தால் பல்லைக் ாட்டுகிறார்கள்; கண் மறைவில் கண்ட டி பேசுகிறார்கள்! எல்லாம் நாம் பொது னங்களின் கஷ்டத்தை உணராமல் ணம் சேர்த்ததில் வந்த பலன்தான்!" ன்று மனசிற்குள்ளேயே நினைத்து வதனைப்பட்டுக் கொண்டு வந்தார் பேரலிங்கம். அப்பொழுது அவரது கை வரை அறியாமலே மடியைத் தொட்டுத் தாட்டுப் பார்த்துக் கொண்டிருந்தது.

"யாரது, நில் அங்கேயே!" என்ற த்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் ார்த்தார் குபேரலிங்கம். வேறு யாரு ல்லை: அந்தப் பக்கத்திலேயே பிரசித்தி பற்ற திருடனும், அரசாங்கத்தையே கடுகாளாக ஏமாற்றிக் கொண்டு வரு வனுமான கொடுக்கூர் ஆறுமுகம்தான்.

ஆறுமுகத்தைப் பார்த்தவுடனேயே பேர லிங்கத்தின் சப்த நாடியும் டங்கி விட்டது. அவருடைய கைகள் டியை இறுகப் பிடித்துக் கொண் ருந்தன. அப்படியே அசைவற்று மரம் பால் நின்றார்.

ஆறுமுகம் கைத் துப்பாக்கியைக் காட் க் கொண்டே "மடியில் உள்ளதை எல் ாம் எடுத்து மரியாதையாகக் கொடுத்து டும். இல்லையேல்..." என்று பய றுத்தினான்.

கைத் துப்பாக்கியையும் ஆறுமுகத்தை ம் மாறி மாறிப் பார்த்தார் குபேர ங்கம். அவருக்குத் திடீரென்று ஒரு ாசனை தோன்றியது.

அதற்குள், "என்ன யோசிக்கிறீர்?" என்று அதட்டினான் ஆறுமுகம்.

"இல்லை...நான் என்னிடமுள்ள ரூபாய் களை யெல்லாம் கொடுத்து விடுகிறேன். அதற்குப் பதிலாக நீ அந்தக் கைத் துப்பாக்கியை எனக்குக் கொடுத்து விட வேண்டும்" என்றார் குபேரலிங்கம்.

ஆறுமுகம் சிறிது நேரம் ஏதோ யோசிப்பதுபோல் இருந்துவிட்டு, "சரி, முதலில் நீர் உம்மிடம் இருக்கும் பணத்தை எல்லாம் கொடுத்து விடும். பிறகு இந்தக் கைத் துப்பாக்கியைத் தரு கிறேன்" என்றான்.

கைகள் நடுங்க மடியை அவிழ்த்து, அதில் தான் வைத்திருந்த பணத்தை யெல்லாம் உடனே எடுத்துக் கொடுத்து விட்டார் குபேரலிங்கம்.

ஆறுமுகமும் சொன்னது சொன்னபடி தன்னுடைய கைத் துப்பாக்கியை மிராசு தாரிடம் கொடுத்து விட்டுத் திரும்பினான்.

அவ்வளவுதான்! "டேய், ஓடாதே! ஓடினால் சுட்டு விடுவேன்!" என்று ஆறு முகத்தைப் பயமுறுத்தினார் குபேர லிங்கம்.

ஆறுமுகம் கலகலவென்று சிரித்தான். குபேரலிங்கத்துக்கு ஒன்றுமே புரிய வில்லை. சுற்று முற்றும் பார்த்தார்.

"பக்கத்தில் யாருமில்லை; பயப்பட வேண்டாம். ஆனால், நீர் கையில் வைத் திருக்கும் துப்பாக்கியில் ஒன்றுமே கிடை யாதே!" என்றான் ஆறுமுகம் பரி காசமாக.

குபேரலிங்கம் அதைக் கேட்டவுடன் மிரள மிரள விழிக்கவில்லை. கையில் வைத்திருந்த துப்பாக்கியைத் தூர எறிந்து விட்டு அவரும் கொல்லென்று சிரித்தார்.

ஆறுமுகம் முகத்தில் அசடு வழியக் குபேரலிங்கத்தையே பார்த்துக் கொண் டிருந்தான். அவர் சொன்னார்:—

"என்னிட மிருந்து நீ அபகரித்துக் கொண்ட பணமும் இப்போது செல்லத் தக்கவையல்ல; எல்லாம் பத்தாயிரம் ரூபாய் நோட்டுகள்!"

அப்பொழுது திருட்டு ஆறுமுகம் நிஜ மாகவே திருட்டு விழி விழித்தான்!

காலக்ஷேபம்

அவனுக்குத் தெரிந்தது !

கணவன் (மனைவியிடம்) :—உங்கள் அப்பா எனக்குப் போட்ட மோதிரம் வைர மோதிரம் அல்ல. இமிடேஷன் வைரம் அது.

மனைவி :—உங்களுக்கு எப்படித் தெரியும்? வைரத்திற்கும் இமிடேஷன் வைரத்திற்கும் வித்தியாசம் தெரியுமா?

கணவன் :—வித்தியாசம் தெரியாவிட்டால் என்ன? உங்கப்பாவை எனக்குத் தெரியாதா!

—எம். எஸ். துரைசாமி.

★

சரியான பதில் !

வக்கீல் (பஸ் கண்டக்டரைப் பார்த்து) :—அவசரமாக நான் கோர்ட்டுக்குப் போகணும் சீக்கிரம் எடுங்கோ, அப்பா !

பஸ்-கண்டக்டர் :—உங்களை எதிர்பார்த்தா, நானும் கோர்ட்டிலே வந்து நிற்க வேண்டியது தான்.

—அம்மணி அம்மாள்.

★

தெரியவில்லை

ஒரு நாடகம் நடந்து கொண்டிருந்தது. அதில் ஒரு காட்சியில் கதாநாயகனும் கதாநாயகியும் தங்கள் சம்பாஷணையை மறந்து விட்டுச் சும்மா நின்றார்கள். திரைக்குப் பின்னால் இருந்த நாடக ஆசிரியர் 'சந்திரோதயம் ஆய்விட்டது' என்று சொல்லிக் கொடுத்தார் அப்பொழுதும் இருவரும் ஒன்றும் பேசவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக, பலமாகச் சொல்லியும் பேசாமல் இருக்கவே, நாடக உபாத்தியாயர் ஜனங்கள் காது கேட்கும்படி கத்தினார்.

கதாநாயகன் :—அது கேட்கிறது ஐயா ! ஆனால் எங்களிருவரில் யார் அதைச் சொல்லுவது என்றுதான் தெரியவில்லை !

—எஸ். சுப்பரத்தினம்.

★

புத்திமதி !

மாஜிஸ்ட்ரேட் :—நீ குடித்துவிட்டுத் தெருவில் கூச்சலிட்டுக் கொண்டிருந்ததற்காக ஐந்து ரூபாய் அபராதம் விதித்திருக்கிறேன். அபராதம் செலுத்தா விட்டால் ஒரு வாரம் சிறைத்தண்டனை.

கைதி :—என்னிடம் ஐந்து ரூபாய் இல்லீங்களே !

மாஜிஸ்ட்ரேட் :—அப்படியானால் நீ சிறைக்குத்தான் போகவேண்டும். குடியில் பணத்தைச் செலவழிக்காதிருந்தால் இப்பொழுது அபராதத்தைக் கொடுத்துவிடலாமல்லவா?

—ச. ச. சுப்பையா.

பெரிய மனிதர் !

ஒரு பகட்டான ஆசாமி ஆபீஸுக்கு... நுழைந்து, "மானேஜர் ராமராவ் இரு... கிறாரா?" என்று கேட்டார்.

"இல்லையே; ஏன்? தங்களுக்கு என்... செய்யவேண்டுமென்பதைச் சொன்னால்... செய்கிறேன்" என்று பதில் சொன்... தலைமைக் குமாஸ்தா.

"இல்லை; தங்களால் ஆகவேண்டியது... ஒன்றுமில்லை. மேலும் கீழ் உத்தியோகஸ்த... களிடம் நான் ஒன்றும் வைத்துக்கொள்... தில்லை. ராமராவ் வரும் வரையில் கா... திருக்கிறேன்" என்று சொல்லிவிட்... உட்கார்ந்து கொண்டார்.

ஒரு மணி நேரம் கழிந்தது. "இன்... எவ்வளவு நேரம் ஆகும் அவர் திரும்பிவர..." என்றார் வந்தவர் பொறுமையை இழந்து.

"குறைந்தது நான்கு நாட்கள் ஆகு... அவர் மதுரைக்குப் போயிருக்கிறார் ... முக்கிய காரியமாக" என்றார் குமாஸ்தா.

—டி. ஏ. கிருஷ்ணமூர்த்...

★

அனுபவம் !

கந்தர் :—கோபாலா ! எனக்கு இரண்... நாளாய்த் தலைவலி தாங்க முடியவில்... ரொம்ப சிரமப்படுகிறேன்.

கோபால் :—அதற்கென்னடா ! நான் ... மருந்து கொடுக்கிறேன்.

கந்தர் :—அப்படின்னு ரொம்ப நம்... மருந்தா என்ன ?

கோபால் :—அதைப்பற்றிக் கேட்க... வேண்டாம். நான் இருபது வருஷமாக எ... தலைவலிக்கு அந்த மருந்தைத்தான் உபயோ... கித்து வருகிறேன். —நீலாம்பா...

★

சரிதான் !

செட்டு (கோபாலனைப் பார்த்து) :—எ... பழைய சிநேகிதன் ஒருவனைப் பார்க்கப் போயிருந்தேன். என்னைக் கண்டதும் மேஜையின் மேலிருந்த பவுண்டன் பேனாவை எடுத்து மறைத்து வைத்துக் கொண்டான்.



கோபாலன் :—எதற்காக அப்படிச் செய்தான்? நீ திருடி விடுவாயென்று பயந்தினாலா?

செட்டு :—அப்படியிருக்காது. அதை ந... எங்கே அடையாளம் கண்டு பிடித்து... வேனோ என்றுதான். —ஆ. குப்புசா...



வான சஞ்சாரம்

இசைத்தேனீ

சென்னையில் 19ல. நடந்த பாருபள்ளி ராமகிருஷ்ணய்ய பந்துலுவின் கச்சேரி, எதிர்பாராதபடி ஏமாற்றத்தைக் கொடுத்தது. அன்று அவருக்கு ஜலதோஷம் போலும்! சாவேரி, உமாபரணம், காமவர்த்தினி, சாருகேசி ராகங்களை வழக்கம்போல் உழைத்துப் பாடினார். ஆனால், பாவம்! என்றுமில்லாதவாறு அன்று சுருதி சேரவில்லை. எனவே, கச்சேரி ரஸிக்கவில்லை.

20ல. திருச்சியில் டி. கே. ரங்காச்சாரியின் கச்சேரி அமோகமா யிருந்தது. காம்போதி தோடி ராகங்கள் வெகு சிறப்பா யிருந்தன. உருப்படிகளையும் நாமாய்க் கையாண்டார். கடைசியில் கேட்ட 'எப்போ வருவாரோ' ராக பாவம் ததும்பி உருக்கமா யிருந்தது.

சென்னையில் மீனாக்ஷி ராமகிருஷ்ணனின் கானம் எதிர் பார்த்ததற்குமேல் அதிக ஜோராய் அமைந்தது. கனிப்பும் மதுரமும் சேர்ந்த குரலில் நிதானமும், அழுத்தமும் கொண்டு, பாடியது மனங் கவர்ந்தது. தோடிக்கே முதல் ஸ்தானம் கொடுக்க வேண்டும். 'ஸ்ரீ வெங்கடேசய்' கிருதியில் 'மாரஜனக' என்ற இடத்தில் பொழிந்த நிரவல்களும் ஸ்வரங்களும் அவரது திறமையை நன்கு வெளிப்படுத்தின.

17ல. சென்னையிலிருந்து கேட்ட கனக்காடு ஸகாதேவனின் கச்சேரியும் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தது. ரஞ்சகமும் நல்ல உதவுபடியும் கொண்ட சாரீரம்; தேர்ந்த ஞானபாவம்; கவர்ச்சி கொடுக்கும் வழி. தோடியை உருக்கமான சஞ்சாரங்களுடனும், நீண்ட கார்வைகளுடனும் உருக்கமாய்ப் பாடினார்: காநடாப்ரியா, அடாணா, சுப பந்துவராளி ராகங்களும் நாமா யிருந்தன.

•   •   •

மற்றக் கச்சேரிகளில் 15ல. திருச்சியிலிருந்து கேட்ட என். ஆர். ஸ்ரீனிவாஸய்யங்காரின் கானம் மெச்சத்தக்கது. நய சாரீரத்தில் நல்ல உதவுபடியுடன் கல்யாணி தோடி ராகங்களில் அழகு சஞ்சாரங்களை அமோகமாய்ப் பொழிந்தார். 'ராஜு வெடல' கிருதி ராகபாவம் நிறைந்து வனப்பா யிருந்தது.

நாகர்கோவில் கணேசன் தாம் மிருதங்க நிபுணர் மாத்திரமல்ல, அழகாய் வாய்ப்பாட்டுக் கச்சேரியும் செய்யத் தெரியும் என்பதை 16ல. சென்னை நிலயத்தில் பாடிக் காட்டினார். நல்ல தேர்ச்சியுடன் காம்போதி, யதுகுல காம்போதி, பைரவி, கல்யாணி ராகங்களை வண்ணமாய் வழங்கினார். 'நீது சரண' கிருதியின் நிரவல் ஸ்வரங்களில் தம் ஞானச் சிறப்பை விளக்கினார்.

17ல. 2-30 மணிக்குச் சென்னையில் குறி
பிட்ட நிகழ்ச்சிக்குப் பதிலாக ஜி. என். ப
நாதன் செய்த கச்சேரி கவனிக்கத்தக்க
கட்டை சாரீரம் போலும்! ஆனால் ந
ஞானபாவம் கொண்டவர். நவரஸம் போ
சாவேரி, மலையமாருதம், சாருகேசி ராகங்க
வெகு நாமாய்ச் சமாளித்தார்.

18ல. சென்னையில் கேட்ட ராஜம் வை
நாதனின் கானமும், ஜி. ஸ்ரீனிவாச
கோமளவல்லி இவர்களின் வயலினும் கு
பிடத்தக்கவை. முன்னவரின் ராகங்க
ஒழுங்கு, நிதானம், அழகு சஞ்சாரங்களுட
வனப்பா யிருந்தன.

19ல. சென்னையில், பத்மா ஸ்வாமிநாத
இனிய குரலில், சுகபாவத்துடன், ே
மனோஹரி, அடாணா, ஷண்முகப்ரியா ரா
களை வழங்கினார்.

20ல. சென்னையில் டி. ஞானாம்பா
ஏ. பட்டம்மாள் இவர்களின் கானங்க
21ல. டி. வி. கிருஷ்ணனின் கச்சேரி
கவனத்தை யிழுத்தன. முதல்வரின் கச்ே
ஆரம்ப முதல் கடைசிவரை பிருவா யிருந்த

•   •   •

கலைப்பற்ற கர்னாடக சங்கீதத்தின் மு
சிறப்பும் வீணையின் தனிப் பெருமையும்
கானம் யார் மூலம் நிகரற்ற முறையில் வெ
படுகின்றன வென்றால், காரைக்குடி சாம்
பய்யர் மூலம் தான் என்பது அவரது கச்ே
களைக் கேட்கக் கேட்க நன்கு புலப்படும். 2
இரவு திருச்சியிலிருந்து கேட்ட அவரது வி
கானம், திகட்டாத இசை விருந்தாகு
நமது சங்கீதத்தின் அழகு, ராகங்களிலேதா
அதிகம் தென்படும் என்பதை விளக்குவ
போல், ராக தானங்களை ஏராளமாயும் நிம்
மாயும் கையாண்டார். பைரவி, கல்யா
அடாணா, சாவேரி, ஸ்ரீராகம், இவைகளைச்
சாரக் கிரமமாய் ஆலாபனை செய்ததே
கல்யாணி ஸ்ரீராகங்களில் தானம் வாசித்த
மனங் கவர்ந்தது. கிருதிகளும் ராகபா
ததும்பி விலங்கின.

26ல. சென்னையில் முழு நேரக் கச்ே
செய்த கனக்காடு என். ராமநாராயணய்ய
ரஞ்சக சாரீரமும், போற்றத்தக்க ஞானமு
நிதானத்துடன் நன் முறையும் கொண்டு ர
கர்களின் மதிப்பைப் பெற்றிருப்பவர். அன்
அவரது காநடாப்ரியா தோடி ராகங்க
ஒன்றுக்குமே சொன்று வனப்பாயிருந்தன.

27ல. திருச்சியில் எதிர்பாரக்காதபடி ச
துர் ஏ. ஜி. சுப்ரமணியத்தின் கச்சேரி ே
கும்படி நேரிட்டது. தற்சமயம் முன்னணியி
நிற்கும் இளம் வித்வான்களில் அவர் ஒரு
மல்லர். அன்று எல்லா உருப்படி களுக்
அவைகளின் ராகங்களை ஆலாபனை செய்த
போற்றத்தக்கது. உதய ரவிச்சந்திரிக
பூர்விகல்யாணி, பல்லவிராகமாம் சங்க
பரணம், இவை மிகத் நாமாயிருந்த
'மீனாக்ஷிமே முதம்' கிருதி வெகு சு
யிருந்தது.

28ல. திருச்சியில் டி. ஆர். நவநீதத்துக்கு
பதிலாக திருப்பாம்பரம் சுவாமி நாதபிள்
வேணுகானம் செய்தார். ஸிம்மேந்
மத்யமம், சங்கராபரணம், காம்போதி இவை
னோடு கிருதி ராகமாலிகையும் கனி
யிருந்தன. 'இல்லை சகலைக் கான' என்
பல்லவியில் தமது திறமையை நன்
காட்டினார்.

சென்னையில் தூது கோஷ்டி

சென்ற மாதம் 23, 24உ களில் சென்னை நகருக்கு வந்திருந்த பிரிட்டிஷ் பார்லிமெண்டரி தூது கோஷ்டியினர் முக்கியமாக மகாத்மாஜியையும் ராஜாஜியையும் சந்திப்பதற்காகவே இங்கு வந்தார்கள் என்பது பிரசித்தமான விஷயம். 23, 24உ இரு தினங்களிலும் மகாத்மா காந்தியைச் சந்தித்துப் பேசினார்கள்.

24-ம் தேதி காலை "ஹிந்து" காரியாலயத்தில் ராஜாஜியைச் சந்தித்து சுமார் மூன்றரை மணிநேரம் இந்திய அரசியல் நிலைமையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். ராஜாஜியின் சந்திப்பு முடிந்து அவர்கள் வெளியே வந்ததும், வெளியில் கூடியிருந்த பத்திரிகை நிருபர்கள் அவர்களைச் சூழ்ந்து கொண்டு "ஏதாவது சொல்வதற்கு உண்டா?" என்று கேட்டார்கள். அதன் பேரில் தூது கோஷ்டியில் சிலர் கூறிய ரஸமான அபிப்பிராயங்கள் பின்வருமாறு:—

மிஸ்டர் ஹாப்கின் மாரிஸ்:—"ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் இந்தியாவின் முதல் தர இராஜதந்திரி. இதுவரை நாங்கள் கேட்டவைகளில் மிகச் சிறந்த நிர்மாண யோசனையை அவர் எங்களுக்குக் கூறினார்."

மிஸ்டர் ஏ. ஜி. பாட்டம்லி:—"ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் மிக்க நிர்வாகத் திறமை வாய்ந்தவராகவும், தலைசிறந்த அறிவாளியாகவும், உயரிய சிந்தனையாளராகவும் எங்களுக்குத் தோன்றினார். இந்திய அரசியல் பிரச்னையை அவரைப் போல் தெளிவாக எங்களுக்கு வேறு யாரும் எடுத்துக் கூறவில்லை. அவரைப் போல் இன்னும் சிலர் இருந்தால் இந்தியாவுக்காகவும் கவலைப்பட வேண்டியதில்லை. வெறும் பேச்சில் பொழுது போக்காமல் உடனே காரியத்துக்குப் போக வேண்டுமென்று அவர் அவசரப்பட்டார். இந்தியாவுக்கு உடனே இப்பொழுதே சுதந்தரம் வேண்டுமென்று அவர் வற்புறுத்தினார்."

ரெவரெண்டு சோரன்ஸன்:—"ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாருடன் இந்தியாவுக்கு பிரிட்டன் அதிகாரத்தை மாற்றுவது பற்றிப் பல்வேறு யோசனைகளை விவாதித்தோம். எல்லா அங்கத்தினர்களும் விவாதத்தில் கலந்து கொண்டார்கள். இந்தச் சம்பாஷணையின் விளைவாக ஏற்கெனவே மிகவும் சிக்கலாகத் தோன்றிய பல பிரச்னைகள் தெளிவுற்றன. இந்தச் சந்திப்பிலே செலவழித்த காலம் மிகவும் பயன்தரக் கூடியது என்ற எண்ணத்துடன் நாங்கள் வெளியே வந்தோம்."

பொய் சொல்லாதவர்!

ஸோமாஸ்

ராஜகோபாலன் முதலில் கடிதம் எழுதி அனுப்புவதாகத்தான் இருந்தான். ஆனல் மானேஜரின் சுபாவம் அவனுக்குத் தெரியுமாதலால் அப்படிச் செய்யவில்லை. வெகு நேரம் ஆலோசித்த பிறகு நேரிலேயே கேட்பது என்ற முடிவுக்கு வந்தான்.

கர்ப்பக் கிருஹத்துக்குள் போகும் பரம பக்த சிரோமணியைப் போல் மிகவும் பவ்யமாக மானேஜரின் அறைக்குள் சென்ருன் ராஜகோபாலன்.

அவனைப் பார்த்த மானேஜர் விறைப்பாக "என்ன வேண்டும்? எதற்காக வந்தீர்?" என்று கேட்டார்.


"என் மனைவிக்கு உடம்பு சரியில்லாமலிருக்கது. இன்று கவலைக்கிடமாயிருப்பதாக ஆள் வந்து கூறினன். தயவு செய்து எனக்கு இரண்டு நாள் லீவு கொடுக்க வேண்டும்!"

உடனே மானேஜரின் முகம் கடுமையாக மாறிவிட்டது. "என்ன ஓய், ராஜகோபாலன்! சதா லீவு கேட்பதுதான் உமக்கு வேலையா? முன்பு ஒரு தடவை பாட்டிக்கு உடம்பு சரியாயில்லையென்று லீவு கேட்டீர்! அதற்குப் பிறகு அப்பாவுக்கு உடம்பு சரியாயில்லையென்று லீவு கேட்டீர். உம்ம தொல்லையே பெரிதாயிருக்கிறதே!"

"ரொம்ப கவலைக்கிடமாயிருக்கிறது என்று செய்தி வந்திருக்கிறது. பெரிய மனது பண்ணி லீவு கொடுக்கவேண்டும்!"

"சரி, போம். இன்னும் ஒரு மணி நேரம் கழித்து வந்து பாரும்!" என்று கூறிவிட்டு மானேஜர் தம் வேலையைக் கவனிக்க ஆரம்பித்தார்.

ராஜகோபாலனுக்கு வேலையே ஓடவில்லை. மானேஜர் லீவு கொடுப்பாரோ மாட்டாரோ என்ற சிந்தனையிலேயே அவன் மனம் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.



சற்று நேரத்துக்கெல்லாம் மானேஜர் ராஜகோபாலனைக் கூப்பிட்டு, "ஓய், எ
ஐயா இப்படிப் பொய் புளுகுகிறீர்? நி
மான காரணத்தைச் சொல்லி லீவு கே
கிறதுதானே?" என்று கோபமாகக் கே
டதும் அவன் நடுங்கிப் போய் விட்டான்.

"இல்லை...... வந்து ......!"

"இல்லையாவது, மண்ணாங்கட்டியாவது
இப்பொழுது உம் வீட்டுக்கு ஆபீ
பையனை அனுப்பி விசாரிக்கச் சொ
னேன். உம் வண்டவாளம் புரிந்து வி
டது. மனைவிக்கு அசௌகரியம் என்று
கவலைக்கிடமாயிருக்கிறது என்று
சொன்னீரே! அதெல்லாம் ஒன்று
இல்லையாமே!" என்றார் மானேஜர்.

"நிஜத்தைச் சொல்லி விடுகிறேன்
நீங்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது!

"நிஜத்தைச் சொல்லி லீவு கேளு
தருகிறேன். பயப்படாதேயும்!"

"நிஜத்தைச் சொன்னால் நீங்கள் என்
வேலையை விட்டே அனுப்பினாலு
அனுப்பி விடுவீர்கள். உங்களுக்கு அ
வளவு கோபம் வரும்!"


"அட, பிரமாதப் படுத்துகிறீரே
உம்மை ஒன்றும் செய்யவில்லை. சொல்லு
ஐயா! என்ன சமாசாரம்?"

"ஒன்றும் இல்லை. நான்தான் ஒ
அவசர காரியமாக லீவு வேண்டும் என்
தற்காக மனைவிக்கு உடம்பு சரிய
யில்லையென்று புளுகினேன் என்று
நீங்களும் ...?"

"என்ன, நானும் கூடப் புளுகினே
என்கிறீரா?"

"ஆமாம்; எனக்குக் கல்யாணமே ஆ
வில்லையே! நான் உடுப்பி ஹோட்
லில் அல்லவா சா
பிடுகிறேன்?"

"சரி, சரி! உமக்
ஒரு வாரம் லீ
கொடுத்திருக்கிறேன்
போய் வாரும்! அ
போதே நிஜத்தை
சொல்லித் தொலை
பதுதானே?" என்
சிரித்துக் கொண்
கூறினர் மானேஜர்.




இன்று உயர்ந்தது
நாளை இன்னும் சிறந்தது

பயர்ஸ்டோன்

Firestone

கம்-டிப்பிடு

டயர்கள்



F. 6/46


SUNSHINE
Glaxo
ஸன்ஷைன் கிளாக்ஸோ
குழந்தைகளை புஷ்டியாக வளர்க்கிறது
இந்தியாவில் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :
எச். ஜெ. பாஸ்டர் & கோ., லிட்.
பம்பாய் - கல்கத்தா - மதராஸ் - லாகூர்


உங்களுடைய சுவாசக்குழாய்களுக்கு
உயர்ந்த குணமளிக்கும் மருந்தே நல்லது
ஸிரோலின்
'ரோச்'
இருமலையும்
ஜலதோஷத்தையும் ஒழிக்கிறது

சைபால் (Regd) CIBOL

முகப்பரு, சேத்துப்புண், சிரங்கு, வேனல் கட்டி
தீப்பட்ட புண், கரப்பான் முதலியவைகளுக்குக்
கை கண்ட மருந்து

•

அயோடிசால் (Regd) IODISAL

ரத்தத்தைச் சுத்தி செய்து
தேகத்திற்கு ஆரோக்கியத்தைக்
கொடுக்கும்.

பாட்டில் 1-க்கு விலை ரூ. 2—0—0

•

பேபி - கிரைப் BABY - GRIPE

குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு, வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, அஜீரணம், மாந்தம், பல் முளைக்கும்போது ஏற்படும் வயிற்றுப்போக்கு, முதலிய சகல வியாதிகளையும் போக்கி நல்ல ஆரோக்கியத்தையும் தரும் சிறந்த திராவகம்.

தயாரிப்பவர்கள் :

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை

மதராஸ் ஸிடி, நெல்லூர், ஸீடெட், விசாகப்பட்டணம்
ஜில்லாக்களுக்கு ஏஜண்டுகள் :

ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ், கெமிஸ்ட்ஸ், பி. டி., மதராஸ்

குண்டூர், கோதாவரி, கிருஷ்ணா ஜில்லாக்களுக்கும்
நிஜாம் சமஸ்தானத்திற்கும் ஏஜண்டுகள் :


சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா

மைசூர் சமஸ்தானத்திற்கு ஏஜண்டுகள் :

சேஷமஹால் பார்மஸி, பெங்களூர் ஸிடி.


சினிமா நட்சத்திரங்களைப் போல, நீங்களும்
உங்கள் சருமத்தைக் காப்பாற்றுங்கள்!
வசந்தா
சருமப் பாதுகாப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார் வசந்தா. அதனால், லக்ஸ் சோப்பை உபயோகிக்கிறேனென்றும், சருமப் பாதுகாப்பை அது ஆச்சரியகரமாக குறைக்கிறதென்றும், தன் சருமத்தை யாதொரு அப்பழுக்குமின்றிக் காப்பாற்றுகிறதென்றும் அவர் கூறுகிறார். அழகு படுத்தும் இந்த கீர்த்திபெற்ற சோப்பின் நுரை சருமத்தை உண்மையாகவே மிருதுவாகவும், மழமழப்பாகவும் செய்து காப்பாற்றுகிறது.
LUX
லக்ஸ் டாய்லட் சோப்
LTS. 133-50-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

..129



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



LKI பிப்ரவரி 3, 1946 4 அணா

Regd. No. M. 4392

